கல்கி



ALKI மார்ச் 10, 1944 4 அண

Regd. No. M. 4392

Edited, Printed and Published by R. Krishnamurthy at the "Kalki" Press, 118-119, Sladens Gardens, Poonamallee High Road, Kilpauk, Madras.



அரைக்கீரை விதைத் தைலம்

அரைக்கீரை விதையுடன் 72-வித சரக்குகளும் அநேக பச்சிலைகளும் சேர்த்து தயாரிக்கப்பட்டது. இத் தைலத்தை வாரம் இரு முறை தேய்த்து ஸ்நானம் செய்து வர சிரசைப் பற்றிய சகல வியாதிகளைப் போக்குவதுடன் கண் எரிச்சல், கண் மறைப்பு முதலிய கண் சம்பந்தமான வியாதிகளையும், காது குத்தல், காதில் சீழ் வருதல் முதலிய வியாதிகளையும் கண்டிக்கக் கூடியது.

●

கோகுல் சோப்

(மிருகக் கொழுப்பற்றது)

ஆடைகளை தூய வெண்மையாக்குவதில் நிகரற்றது.

பெரிய பார்களாகவும் சிறு கட்டிகளாகவும் குறைந்த விலையில் கிடைக்கும்.

●

தயாரிப்பவர்கள் :

டி.எஸ்.ஆர். அண்டு கோ, கும்பகோணம்

மதராஸ் ஸோல் ஏஜெண்டுகள் :

மெஸர்ஸ். புஷ்பவனம் ஸ்டோர்ஸ்

பைக்ராப்ட்ஸ் ரோடு — திருவல்லிக்கேணி


●

பாலக்காட்டுக்கு ஸோல் ஏஜெண்டுகளும்

கோயமுத்தூருக்கு ஸ்டாக்கிஸ்டுகளும்

தி சதர்ன் இந்தியா ஏஜன்ஸீஸ்

அவநாசி ரோடு — கோயமுத்தூர்



உங்கள் மனதிற்குகந்தது

டிலக்ஸ் டெனர் சிகரெட்டின் நறு மணத்தை நீங்கள் மிகவும் விரும்பு வீர்கள். உத்தரவாதமுள்ள 100% பொருக்கின ...ினியா புகையிலை தான் டெ... ய உபயோகிக்கப் படுகிறது. இ...வே எல்லோரும் விரும்பி ரஸிப்பதற்கும், தொண்டைக்கு கெடுதல் செய்யா திருப் பதற்கும் காரணம். மனோ ரம்மிய மான இந்த சிகரெட்டை இன்றே வாங்கி நீங்கள் உபயோகியுங்கள்.

டி லக்ஸ் டெனர் சிகரெட்டு

ஜேம்ஸ் கார்ல்டன் லிட்., லண்டன்

tenor

is truly a de Luxe Cigarette

JAMES CARLTON LTD., LONDON. EASTERN LICENSEES. POST BOX No. 9026, CALCUTTA



Coffee
Ours for Quality
RAW, ROAST OR GROUND
GANESH & Co
MADRAS
RETAIL BRANCH : 285, CHINA BAZAR ROAD

ராஜம்மாள் ஜன்னலைச் சாத்திவிட்டுப் பரிமாறினாள். மனம் நொந்திருந்ததால் வெற்றிலையை மடித்துக் கொடுத்துவிட்டு அதற்கு மேல் தங்காமல் அவள் தன் வீட்டிற்குப் போய் விட்டாள்.


ஆயினும் அவளுக்கு அஞ்ஞானம் விடவில்லை. தன் பெண்ணிற்கு உடம்பு சரியில்லையே என்று அவள் ஒரு முறை கூடவே அன்று கமலாவின் வீட்டிற்குச் சென்றாள்.

4

குழந்தைக்குப் புண்யவாசனமாகி நாலு நாட்கள் கழிந்து விட்டன. சுக்குத் திப்பிலி மருந்து ஊறிய ஜாடியில் போட்டுக்கொண்டு, ராஜம்மாள் கமலாவின் வீட்டின் முன்னறைக்குள் நுழைந்தாள். அப்பொழுது பக்கத்து அறையிலிருந்து தன்னைப் பற்றி ஏதோ பேச்சு காதில் விழவே அவள் அங்கேயே சற்றுத் தயங்கினாள்.

"யாருக்கு வேண்டியிருக்கிறது இந்தக் கொஞ்சல் எல்லாம்? பத்து நாளும் ராகவனுக்குச் சரியாயில்லை போலிருக்கு. குழந்தை இளைத்துத் துரும்பாப் போய்விட்டாள். என்ன பண்ணிவிட்டாள்? இவள் நாலுபேர் பார்க்கும்படி ரேழிலே குறுக்கே நெடுக்கே நடந்தாளாக்கும்! அப்போ தானே நாலு பேர், 'ஐயோ பாவம்! ஓடி ஓடி வேலை செய்கிறாள்!' என்று சொல்லுவார்கள்; தானும் 'பண்ணினேன், பண்ணினேன்'னு சொல்லிக்கலாம்!" என்று கமலா ஆத்திரத்துடன் கூறியது ராஜம்மாளின் செவிகளில் விழுந்தது. அதற்குமேல் அவளால் அங்கு நிற்க முடியவில்லை. அங்கிருந்த மேஜையின் மேல் மருந்து ஜாடியை வைத்து விட்டு, "அவர் சொன்னதைக் கேட்காமல் இங்கே வந்தேனே! ஏன்தான் இந்த அஞ்ஞானம் என்னை விடமாட்டேன் என்கிறதோ!" என்று தன்னை நொந்து கொண்டே ராஜம்மாள் தன்னுடைய வீட்டை நோக்கி நடந்தாள்.

இரு கனவுகள்



பரீட்சைக்குப் படிக்கும்போது இம்மாதிரி ஆனந்தக் கனவு கண்டவிட்டு......

பரீட்சை முடிந்த பிறகு இப்படி துர்சொப்பனம் கண்டு அவஸ்தைப் படுகிறான்!

ஆப் போகும்போல இருக்கு!" என்று சொல்லிக் கொண்டே உட்கார்ந்தாள் ராஜம்மாள். பிறகு தன் பெண்ணைப் பார்த்துக்கொண்டு, "என்னடி அம்மா, உடம்பு வெறுமனே இருக்கயா? ரூஞ்சி வாடி யிருக்கே?" என்று விசாரித்தாள்.

"வெறுமனே இருக்கேன்! நீ இரண்டு நாள் வராவிட்டால் எனக்கு ஏதாவது வந்துடுமா, என்ன?"

"நான்தான் அப்பாவுக்கு உடம்பு சரியா யில்லை. அவசரம் என்றால் உடனே சமையற்காரியை அனுப்பு என்று சொல்லி யிருந்தேனே!"

"அடே! அப்படித்தான் அவசரமா யிருந்தாலும் என்ன வந்துடுத்து? நீ இல்லாமல் ஒன்றும் ஆகாதா? மாமி பார்த்துக் கொள்கிறாள்" என்று சுசீலா ஏளனமாய்ச் சிரித்துக் கொண்டு கூறினாள்.

ராஜம்மாளின் முகம் மாறிற்று. ஆயினும் அவள் அதை வெளியே அதிகமாய்க் காண்பித்துக் கொள்ளாமல், சிறிது நேரம் வார்த்தையாடிக் கொண்டிருந்து விட்டு வீடு திரும்பினாள். சுசீலாவோ தன் தகப்பனாரின் தேக நிலையைப் பற்றி அவளை ஒரு வார்த்தை கூட விசாரிக்கவில்லை.

3

சனிக்கிழமை இரவு இரண்டு மணிக்கு சுசீலாவிற்குப் பெண் குழந்தை பிறந்தது. அவள் தாயாரும் நர்ஸுடன் கூட அவள் அருகில் இருந்தாள்.

குழந்தை பிறந்த ஆறும் நாள் காலை ராஜம்மாள் பத்தியம் வடித் தெடுத்துக் கொண்டு வந்தாள். ஆறு நாட்களாய்த் தன் வீட்டிற்கும் பெண் வீட்டிற்குமாய் அலைந்ததால் அவள் மிகவும் சோர்ந்திருந்தாள்.

அவள் அறையில் நுழைந்ததும், சுசீலா தலையில் துணியைக் கட்டிக் கொண்டு படுத்திருந்தது அவளைக் கவலையுறச் செய்தது.

"என்னடி தலைவலியா, ஜுரமா?" என்று தன் பெண்ணை வினவினாள்.

"தலைவலிதான்."

"பசி இருக்குமோ என்னமோ? சாதம் கொண்டு வந்திருக்கேன். கொஞ்சம் சாப்பிடு. அந்த ஜன்னலைச் சாத்தி விடுகிறேன்."

"ஜன்னலை எதற்காகச் சாத்த வேண்டும்?"

"சொன்னால் கேள்! பச்சைக் குழந்தை மாதிரி இருக்காதே. நேற்று அந்த நர்ஸ் எதிரில் சாப்பிடவேண்டாம் என்றேன்; பிடிவாதம் பிடித்தாய். இன்னிக்கித் தலைவலி வந்து விட்டது. இப்பொழுதெல்லாம், நீ சாப்பிடுகிற போது பெற்ற குழந்தையே பக்கத்துலே இருக்கக் கூடாது என்று சொல்லுவார்கள். அப்படி யிருக்கும்போது அந்த நர்ஸ் இருக்கலாமோ? ஒருவர் கண் மாதிரி இன்னொருவர் கண் இருக்காது. பெரியவர்கள் சொல்கிறதுக்கு மதிப்பு வைத்தால் தேவலை. மாட்டேன், நான்தான் கெட்டிக்காரி என்று சொன்னால் என்ன செய்யலாம்? என் பெண்களே இப்படித்தான். பார்வதி ஒருத்திதான் நான் சொன்னதைக் கேட்பவள்."

"அவள் அகத்துக்காரருக்குச் சொற்பச் சம்பளம். அவள் உன் கையைத் தானே எல்லாவற்றிற்கும் எதிர்பார்க்க வேண்டி யிருக்கிறது? நீ சொன்னபடி கேட்காமல் எப்படி இருக்க முடியும்? எனக்கென்ன, அப்படி ஒன்றும் இல்லை."

"அம்மா, பேச்சு நன்றாயிருக்கிறது! ரொம்ப சமத்தாப் பேசிவிட்டாய்! புத்தி கெட்டுப் போய், நானும் உனக்குச் சொல்ல வந்துட்டேனே! ரோடிலே இருக்கிறவர்கள் எல்லாரையும் கூப்பிட்டு எதிரில் வைத்துக்கொண்டு சாப்பிடேன். யாருக்கென்ன? எக்கேடாவது கெட்டுப் போ" என்று சொல்லிக் கொண்டே கண்களில் நீர் ததும்ப

யார் கொடுப்பார்கள்?



"என்ன உங்களைத்தானே! குழந்தை தோடு கெட்டுப்போய் இரண்டு நாளாயிற்று. சும்மா இருக்கேளே? ஜோஸ்யம் பார்த்து அதைக் கண்டு பிடிக்கப்படாதோ?"

ஜோஸ்யர்:—கண்டு பிடிக்கலாண்டி. கண்டு பிடிக்கலாம். ஆனால் அதற்கு யார் எனக்குப் பணம் கொடுப்பார்கள்?

அந்தரணம்



சியாமளா பாலகிருஷ்ணன்

1

சுசீலாவின் கணவர் டாக்டர் அவர் ஐ. எம். எஸ்.ஸில் சேர்ந்து இந்தியாவை விட்டுச் சென்று ஆறு மாதங்கள் கழிந்து விட்டன. அவள் மூத்த பிள்ளைக்கு நான்கு வயது; இரண்டாம் முறை கர்ப்பம் தரித்திருந்தாள். அதே ஊரில் அவளுடைய தாயார் இருந்தும், அவள் தாயாரின் வீட்டிற்குச் செல்லவில்லை. தலைப் பிரசவத்திற்கே போகாதவள் கணவர் நிறைய சம்பாதிக்கும் பொழுதா போவாள்? ஆனால் கணவர் பக்கத்தில் இல்லாதபொழுது அவளுக்கு ஒரு தனி வீட்டில் இருக்கப் பயமாக இருந்தது. ஆகவே அவள் தன் தாயார் வீட்டின் அருகாமையிலேயே ஒரு வீட்டின் பாகத்தை வாடகைக்கு அமர்த்திக் கொண்டாள்.

பெண் தன்னிடம் எவ்வளவு விரோதம் பாராட்டிய பொழுதும், அவள் பூர்ண கர்ப்பிணியாய் இருக்கும் பொழுது அவளைக் கவனிக்காமலிருக்க தாயின் மனம் ஒப்புமா? கணவர் தடுத்தும் அதைக் காதில் போட்டுக் கொள்ளாமல் ராஜம்மாள் தன் பெண்ணின் வீட்டிற்கு அடிக்கடி சென்று அவளைக் கவனித்துக் கொண்டிருந்தாள்.

2

வெள்ளிக்கிழமை மத்தியானம் மூன்று மணி இருக்கும். கூடத்தில் வீட்டின் சொந்தக்காரியும் சுசீலாவும் உட்கார்ந்து சம்பாஷித்துக் கொண்டிருந்தனர்.

"என்ன சுசீலா, உன் தாயாரை இரண்டு நாளாய்க் காணோமே?"

"என்னமோ, அப்பாவுக்கு உடம்பு சரியில்லையாம்; இங்கே வராமே இருக்கச் சாக்கு."

"என்னத்துக்கு அப்படிச் சொல்கிறாய்?"

"என்னமோ மாமி, நீங்க என்ன வேணுமானாலும் நினைத்துக் கொள்ளுங்கோ. அம்மா தான்தான் என்னை பார்த்துக்கொண்டு சாதித்துவிடுகிறாப் போலே எண்ணிக்கறாள். ராகவன் பிறந்தபோது இவர்கள்தான் வந்து சாதித்து விட்டார்களாக்கும்? இரவும் பகலுமாக நர்ஸ் எங்கிட்டயே இருப்பாள். இப்பவும்தான் என்ன? சமையக்காரி இருக்கிறாள், சமைத்துப்போட. நர்ஸுக்குச் சொல்லி அனுப்பித்தால் அவள் உடனே வருவாள். அப்படி ஏதாவது அவசியம் ஏற்பட்டால்கூட இருக்கிறவர்கள் நீங்கள் பார்த்துக் கொள்ளமாட்டேளா? அம்மா வந்து இங்கே என்ன எனக்குச் சாதிக்கணும்?"

"என்னவா யிருந்தாலும் தாயாரோ இல்லையோ, அவள் வந்தால் கொஞ்சம் நிம்மதிதான்."

"எங்களுக்குள்ளே அந்த உறவுதான் மிச்சம் ...... அதோ அம்மா வருகிறாள் மாமி."

அப்பொழுது உள்ளே வந்த ராஜம்மாளை "வாங்கோ" என்று உபசரித்தாள் வீட்டுக்காரி.

"அப்பாடி, என்ன வெயில்! நடந்து வரவே முடியவில்லை. கால் கொப்பளித்

முதல் விஷயம்



வீட்டுக்கார அம்மாள்:—உண்டியிலே பணம் போடுகிறது அப்புறம் இருக்கட்டும்; இந்தப் புடவை எங்கே வாங்கினீர்கள் என்பதை முதலில் சொல்லுங்கள்.

சர்மாவின் ஜுரம்

"ஸோமாஸ்"

"நான் இன்று மாலை 5 மணிக்கு சைதாப்பேட்டை போக வேண்டும். அங்கே நான் ஒரு பிரசங்கம் செய்ய வேண்டும். 4-30 மணி ரயிலுக்குப் போகலாம் என்றிருக்கிறேன்" என்றார் கலாசாலை தத்துவ சாஸ்திர ஆசிரியர் கோபால சர்மா.

இதைக் கேட்டதும் அவர் மனைவி சாரதாவுக்குத் தூக்கி வாரிப் போட்டது. கொஞ்ச நேரம் ஒன்றும் தோன்றாமல் ஸ்தம்பித்து நின்று விட்டாள்.

ஏனென்றால், இது வரையில் சர்மா மணிக் கணக்கு முதற் கொண்டு இவ்வளவு சரியாகக் கூறினதே இல்லை. அநேகம் தடவைகள் பிரசங்கஞ் செய்வதற்கு முதல் நாளே கிளம்பி விடுவார். சில சமயம் பிரசங்கம் செய்ய வேண்டிய தினத்துக்கு அடுத்த நாளும் செல்வதுண்டு!

சர்மா உடை அணிந்து கொண்டிருந்த விதம் சாரதாவின் ஆச்சரியத்தை அதிகப்படுத்தியது. ஒன்று அவர் பனியனை ஷர்ட்மீது போட்டுக் கொண்டிருப்பார்; அல்லது ஷர்ட் பொத்தான் முதுகுப் புறம் இருக்கும்படியாகப் போட்டுக் கொள்வார். இன்றைய தினமோ நவ நாகரிக புருஷன்போல் நன்றாக உடை அணிந்து கொண்டிருந்தார்!

தினந்தோறும் சர்மாவுக்கு "இப்படிச் செய்ய வேண்டும், அப்படிச் செய்ய வேண்டும்" என்று ஒவ்வொன்றையும் சொல்லிச் சரிப்படுத்துவதற்குத்தான் சாரதாவுக்குப் பொழுது சரியாயிருக்கும். ஆனால் இன்றைய தினம் சாரதாவுக்கு வேலையே இல்லை.

வருஷக் கணக்காகச் செய்துகொண்டு வரும் காரியங்களில் திடீரென்று மாறினால் யாருக்கும் சந்தேகம் உண்டாவது சகஜந்தானே!

சாரதா எண்ணாததெல்லாம் எண்ணினாள். "இவர்தானா என் கணவர்? இவருக் கிருந்த ஞாபக மறதி எங்கே போயிற்று? ஒரு சமயம் ஊருக்குப் போவதற்கு ரயில்வே ஸ்டேஷனுக்குச் சென்று பிரயாணிகள் தங்கும் அறையிலுள்ள பெஞ்சியில் உட்கார்ந்து, அது தான் ரயில் வண்டியின் பெஞ்சி என்று நினைத்துக் கொண்டு, பத்து மணி நேரம் வரையில் ரயில் போகிறது என்று நினைத்துக் கொண்டு உட்கார்ந்திருந்தாரே, அவர்தானா இவர்?" என்று அவள் பலவிதமாக நினைத்து வருந்தினாள்.


"ரயிலுக்கு நாழிகை ஆகிவிட்டது. நான் போக வேண்டும்" என்று கோபால சர்மா தம் கைக் கடிகாரத்தைப் பார்த்துக்கொண்டே கூறினார்.

சாரதா பயத்தினால் நடுங்கிக் கொண்டே குடையைக் கொடுத்து விட்டு, சர்மாவின் காலைப் பார்த்தாள். அன்று அவர் செருப்பும் சரியாக மாட்டிக் கொண்டிருந்தார்! வழக்கம்போல் செருப்பைக் கால் மாற்றிப் போட்டுக் கொள்ளவுமில்லை, ஒற்றைக் காலில் மாட்டிக்கொண்டு நிற்கவுமில்லை!

இனிமேல் சாரதா சந்தேகப்படவே வேண்டியதில்லை. அவள் எதிர் வீட்டிலிருந்த டாக்டர் வீட்டுக்கு ஓடினாள். டாக்டர், கோபால சர்மாவைப் பரீட்சை செய்து பார்த்ததில் அவருக்குக் கடுமையான ஜுரம் அடித்துக் கொண்டிருப்பதை யறிந்தார். சர்மாவுக்கு இன்ஜெக்ஷன் கொடுத்தார்.

ஒரு வாரத்தில் கோபால சர்மா குணமடைந்து வேலை செய்ய மேஜையின்மீது உட்கார்ந்தார். சாரதாவும் பக்கத்திலிருந்தாள். சர்மா பேனாவை எடுத்து மைக் கூடில் தோய்த்துத் தலைகீழாகத் திருப்பி நிப்புப் போடாத நுனியினால் எழுதிவிட்டு மறுபடியும் அந்த நுனியையே மைக் கூடில் தோய்த்தார். பிறகு எழுதிய கடிதத்தை எடுத்துக் கைக்குட்டைக்குப் பதிலாக மூக்கைத் துடைக்க முயன்றதும் சாரதாவின் முகத்தில் தெளிவு வந்தது.

கோபால சர்மாவுக்கு ஜுரம் தெளிந்து விட்டது!



கதவு படாரென்று திறந்தது. உடனே உள்ளேயிருந்த விளக்கு அணைந்து போய், 'கும்'மென்று அந்தகாரம் எங்கும் சூழ்ந்தது.

"பாட்டி! விளக்கு!" என்றேன் நான்.

"ஐயோ! தங்கச்சி! தங்கச்சி!" என்று கதறினான் கிழவன்.

நான் நெருப்புப் பெட்டியை எடுத்து விளக்கைக் கொளுத்தினேன். விளக்கை எடுத்துக்கொண்டு அவளருகில் சென்று பார்த்தேன் ....

3

இதுவரை பொறுமையாக என் நண்பரின் கதையைக் கேட்டு வந்த நான், "அப்புறம் என்ன ஆயிற்று? மாணிக்கம் என்னவானான்? சொல்லுங்கள்" என்றேன்.

"ஆகிறது என்ன? அவன் மூச்சு அப்பொழுதுதான் நின்றது" என்றார் டாக்டர்.

"இது என்ன விந்தை! நிஜமாகவே அவன் இறந்துவிட்டானா?" என்றேன் நான்.

"நீங்கள் எப்படி நினைத்தாலும் சரி; விளக்கு அணைந்தது, அவன் உடலில் உயிரும் இல்லை. அவ்வளவுதான் ...... கேளுங்கள்! பத்துப் பதினைந்து நாட்களுக்குப் பிறகு எதிர்பாராதது நடந்தது ..."

"தெரியும்; செல்லமுத்து ஊருக்கு வந்தான். மனைவி இறந்ததைக் கேட்டு, 'லபோ' 'லபோ' வென்று அடித்துக் கொண்டான். 'ஐயோ! முட்டாள்தனமாக விளக்கைப் பார்க்கச் சொன்னேனே' என்று கதறினான் ..." — இப்படி நான் சொல்லும்போது நண்பர் இடைமறித்து "அதுதான் இல்லை. பத்துப் பதினைந்து நாட்களுக்குப் பிறகு செல்லமுத்து போர் முனையில் இறந்து விட்டான் என்ற செய்தி வந்தது! விளக்கு அணைந்த சமயமும் அவன் உயிர் போனதும் ஒன்றாயிருக்க வேண்டும் என்று எல்லோரும் ஊகித்தார்கள் ...... இதுதான் மாணிக்கத்தின் கதை! இதற்குப் பிறகு என் வாழ்க்கையில் எவ்வளவோ சம்பவங்கள் நடந்து விட்டன. ஆனால் இந்த சம்பவத்தை மட்டும் என்னால் மறக்க முடியவில்லை. இப்பொழுதாவது நீங்கள் நான் சொல்வதை நம்புகிறீர்களா, இல்லையா?" என்று கூறி முடித்தார்.

என்று நான் கிழவியைப் பார்த்துக் கேட்டேன்.

"இந்தப் பாழும் வயிறு ஒன்று இருக்கிறதல்லவா? அதோடு, கண்ணுக்குக் கண்ணான மாணிக்கம் கஷ்டப்படுகிறதைப் பார்க்க அவனால் சகிக்க முடியவில்லை!" என்றாள் கிழவி.

"மாதா மாதம் பணம் வருகிறதா? செல்லமுத்து கடிதம் போடுகிறானா?" என்று நான் கேட்டேன்.

"மாதம் பத்து ரூபாய் வந்து கொண்டுதான் இருக்கிறது; கடிதமும் எப்பொழுதாகிலும் வருகிறது!"

[இந்தச் சமயத்தில் படுக்கையில் மாணிக்கம் புரண்டு படுத்தாள். ஏதோ நினைவால் அவள் கஷ்டப்படுவது போல் தோன்றியது.]

"எப்பொழுதும் தங்கச்சிக்குப் புருஷன் ஞாபகம்தான். எப்பொழுதாவது ஒரு நாள் புருஷன் வந்துவிடுவான் என்றுதான் இப்பொழுதும் உயிரை வைத்துக் கொண்டிருக்கிறாள். ஒரு வாரமாகத்தான் இந்தக் காய்ச்சல் அவளை ஆட்டி வைக்கிறது!"

["பாட்டி! காற்று அடிக்கிறது. கதவை ஒருக்களித்து வை! விளக்கு பத்திரம்!" என்றாள் மாணிக்கம் மறுபடியும்.]

எனக்கு ஆச்சரியம் தாங்கவில்லை. "ஐந்து நிமிஷத்துக்குள் நாலு தடவை 'விளக்கு! விளக்கு!' என்று இந்தப் பெண் ஏன் உயிரை விடுகிறாள்? விளக்குத்தான் சரியாயிருக்கிறதே!" என்று நான் கிழவியைக் கேட்டுவிட்டேன்.

கிழவி ஒரு பெருமூச்சு விட்டாள். அவள் சொன்ன சமாசாரம் என்னைத் தூக்கி வாரிப் போட்டது.

"ஐயா! கோவலன் கதை கேட்டிருப்பீர்களே? சிலம்பை வாங்கிக் கொண்டு அவன் வீட்டை விட்டுப் போகிறபோது, கண்ணகியிடம் விளக்கைக் காண்பித்து, 'என் உயிருக்கு ஆபத்துவந்தால் விளக்கு அணைந்து போகும்' என்று சொல்லிவிட்டுப் போனானல்லவா? அதே மாதிரிதான் செல்லமுத்துவும் சொல்லிவிட்டுப் போனானும். மாணிக்கமும் அப்படியேதான் நம்பியிருக்கிறாள். செல்லமுத்து உயிருக்கு ஆபத்து வரும்போது இந்த விளக்கு அணைந்து போகும் என்று நம்பியிருக்கிறாள். அவள் சதா ஏன் இந்த விளக்கைப் பார்த்துக் கொண்டிருக்கிறாள் என்று இப்பொழுது தெரிகிறதா?"

எனக்குத் 'திக்'கென்றது. என்ன மூட நம்பிக்கைகள்! பகவானே! நிஜமாகவே இந்தத் தேசத்துக்கு விமோசனம் இல்லையா? — என்று எண்ணினேன். ஒரு பெண்ணின் உயிர் இந்தீப ஒளியில் அல்லவா இப்பொழுது ஊசலாடிக் கொண்டிருக்கிறது என்பதை நினைக்க ஒரு பக்கம் எனக்குச் சிரிப்பாக வந்தது; மற்றொரு பக்கம் அச்சமும் வேதனையும் உண்டாயின. இது என்ன பைத்தியக்காரத்தனம்! ஒரு முட்டாள் இப்படிச் சொல்லுவாவது, இந்த அபலைப் பெண் அதை நம்புவாவது! தப்பித் தவறி விளக்கு அணைந்து போனால்?

மெதுவாக மாணிக்கத்தின் அருகில் சென்றேன். அவள் மிகவும் களைப்படைந்திருந்தாள். பலம் உண்டாவதற்காக ஒரு இஞ்செக்ஷன் செய்தேன். "இனிமேல் அவள் தூங்கி விடுவாள், கவலை வேண்டாம்!" என்று கிழவியிடம் சொல்லிவிட்டு வெளியே வந்தேன்.

அப்பொழுதுதான் அந்த அதிசயமான காரியம் நடந்தது. நான் திரும்பினேனோ இல்லையோ, 'விர்'ரென்று காற்று வீசியது. சாத்தியிருந்த குடிசையின்

அவசியமில்லை!



சமையற்கார அம்மாள்:—நம்மாத்துப் பெரிய மாங்கா ஜாடிக்கு இன்னொரு ஜோடி சேர்க்க வேண்டுமென்று நீங்க ரொம்ப நாளா யோசனை பண்ணிண்டிருந்தேளே அம்மா?

வீட்டுக்கார அம்மாள்:—ஆமாம். அதுக்கென்ன இப்போ ... ...?

ச. அம்மாள்:—ஒன்றுமில்லே. இனிமேல் அதைப்பத்தி யோசிக்கவேண்டிய தேவையில்லை என்று தான் சொல்லவந்தேன்.

ஆறுமுகத் தேவருக்குத்தெரியலே, அவர் ஆளை விட்டு ஐம்புலிங்கத் தேவர் மேலே பழிக்குப் பழி வாங்கிவிட்டார். இதற்குப் பிறகு, அதை ஏன் கேட்கிறீர்கள், ஐம்புலிங்கத் தேவரின் தம்பி ஆறுமுகத் தேவரைப் பைசல் பண்ணி விட்டான். இந்தச் சந்தடியில், பிள்ளையாண்டான் செல்லமுத்து மாணிக்கத்தைக் கூட்டிக் கொண்டு எங்கேயோ ஓட்டாய்ப் பறந்து விட்டான். இரண்டு வருஷம் கழித்து ஊரில் அமளி எல்லாம் அடங்கின பிறகு, இரண்டு பேரும் திரும்பி வந்தார்கள். வரும்போது இரண்டு பேரும் புருஷனும் பெண்சாதியுமாக வந்தார்கள்!"

["பாட்டி! விளக்கு, விளக்கு!" என்று இந்த இடத்தில் மறுபடியும் கத்தினாள் மாணிக்கம்.]

"விளக்குக்கு என்ன அம்மா! நல்லாத்தான் எரிகிறதே!" என்றாள் கிழவி.

இந்தச் சமயத்தில் எனக்கு ஒரு சந்தேகம் தட்டிற்று. காற்றும் அடிக்கவில்லை; விளக்கும் நன்றாக எரிகிறது. எதற்காக இப்படி 'விளக்கு, விளக்கு' என்று அந்தப் பெண் அடித்துக் கொள்கிறாள் என்று எனக்குத் தெரியவில்லை.

"ஐயா! மாணிக்கத்தையும் அவள் புருஷனையும் ஊரார் ஒதுக்கி வைத்து விட்டார்கள். அவனால்தான் ஊரில் கொலைகள் நடந்ததென்று அவளைப் பார்க்கக் கூடச் சில பெண் பிள்ளைகள் பயப்பட்டார்கள். அவள் புருஷன் செல்லமுத்து தென்னந் தோப்புக் குத்தகை எடுத்துக் காலம் தள்ளி வந்தான். ஊரார் என்ன சொன்னால் என்ன? இரண்டு பேரும் ராஜாவும் ராஜாத்தியும் மாதிரி குடித்தனம் செய்து கொண்டு வந்தார்கள். இவர்கள் ஒற்றுமையாக நன்றாக இருந்ததே அந்தப் பக்கத்துலே எல்லாருக்கும் பொறாமையாயிருந்தது.

"புருஷனைப் பார்க்காமல் தங்கச்சிக்கு ஒரு நாழி கூட இருக்க முடியாது. சும்மாச் சும்மா தென்னந் தோப்புக்கு ஓடிவிடுவாள். செல்லமுத்து இளநீர் வெட்டிக் கொண்டிருப்பான். கீத்து முடைந்து கொண்டு அவனோடு பேசிக் கொண்டு இருப்பாள் தங்கச்சி. செல்லமுத்து மாத்திரம் என்ன? மாணிக்கம் வீட்டில் சமைத்துக் கொண்டு இருப்பாள்; செல்லமுத்துவுக்குத் தென்னந் தோப்பில் இருப்புக் கொள்ளாது. ஓடி வந்து விடுவான் அரிசி களைந்து கொடுக்க. ஐயோ, இப்படியே அவர்கள் சந்தோஷமாக இருந்திருக்கக் கூடாதா? கடைசியில் இப்படியா குழந்தை தலையில் எழுத வேணும்?

"ஐயா! கண் திருஷ்டி என்று எல்லாம் சொல்கிறார்களே, அது பொய் என்று நினைத்துக் கொண்டிருக்கிறீர்களா? பாருங்கள், புருஷனும் பெண்சாதியும் ரொம்ப நாள் சந்தோஷமாக இருக்க முடியவில்லை. செல்லமுத்துவுக்குக் குத்தகையிலே ஒன்றும் லாபம் வரவில்லை; சாமான் விலைவாசி எல்லாம் ஒரேயடியாய் ஏறிப்போனதில் குடும்பம் நடத்துகிறதே அவர்களுக்குக் கஷ்டமாய்ப் போச்சு.

"பட்டாளத்திலே ஆள் சேர்க்கும் அதிகாரி இந்த ஊருக்கு வந்தார். செல்லமுத்து ஆள் மலை மாதிரி இருந்ததைப் பார்த்தார். மாதம் ஐம்பது ரூபாய் சம்பளம் தருகிறதாகச் சொல்லி ஆளை அழைத்துக் கொண்டு போய் விட்டார்" என்று சொல்லி விட்டு மூச்சு வாங்குவதற்காக நிறுத்தினாள் கிழவி.

"எப்படி அவன் மாணிக்கத்தை விட்டு விட்டுப் போய் விட்டான்?"



மூலையில், 'மினுக்' 'மினுக்' கென்று ஒரு அகல் விளக்கு எரிந்து கொண்டிருந்தது.

நான் நோயாளியைப் பரீட்சை செய்து பார்த்தேன். சுரம் அடித்துக் கொண்டிருந்தது. நாடி பலவீனமாகத்தான் இருந்தது.

"தங்கச்சிக்கு ஒரு வாரமாகக் காய்ச்சல். இன்றைக்குத்தான் கண்ணை விழித்துப் பார்த்தாள்" என்றாள் கிழவி.

அந்தப் பெண்ணுக்கு வயது இருபது தான் இருக்கும். கண்களில் களையில்லா விட்டாலும் முகத்தில் சாந்தம் குடி கொண்டிருந்தது. உடல் மெலிந்து விட்ட போதிலும், அவளது இயற்கை அழகு மறைந்து விடவில்லை.

"இவளுக்கு யாரும் மனுஷர்கள் இல்லை. கடைசியில் நான்தான் மூன்சிப் ஐயாவிடம் சொல்லி யனுப்பினேன்" என்றாள் கிழவி.

"ரொம்ப கன்றாயிருக்கிறது. சொல்லி யனுப்புகிறதைக் காய்ச்சல் கண்டதுமே சொல்லி யனுப்பக் கூடாதா?" என்றேன் நான்.

"காய்ச்சல் கண்டதே எனக்கு இரண்டு நாள் கழித்துத்தான் தெரியும் ஐயா. தங்கச்சி கடமாட்டத்தையே காணுமே என்றுதான் வந்து பார்த்தேன். காய்ச்சல் பொரிந்து கொண்டிருந்தது. அப்பொழுது பிடித்து நான் இங்கேதான் இருக்கிறேன்."

"ஆமாம்; இந்தப் பெண் ஏதாவது கஞ்சி சாப்பிடுகிறாளா?"

"இவ்வளவு நாளாகக் கொஞ்சம் கொஞ்சம் கஞ்சி சாப்பிட்டாள். காலையிலிருந்து அதுவும் இல்லை."

"கவலைப்பட வேண்டாம். நான் ஊசி போடுகிறேன். வியாதி குணம் ஆகி விடும். ஆமாம், இந்தப் பெண்ணின் புருஷன் பட்டாளத்தில் சேர்ந்து எத்தனை நாளாயிற்று?" என்று கேட்டேன்.

"மூணு வருஷம் இருக்கும்."

"இந்தப் பெண்ணைக் கவனித்துக் கொள்ளச் சொந்தக்காரர்கள் வேறு யாரும் இல்லையா? தகப்பன், அண்ணன், தம்பி யாரும் கிடையாதா?"

"எல்லாரும் இருந்தார்கள். ஆனால் கூண்டோடு கைலாசமாக ஒரு நாள் செத்துப் போனார்கள்."

"இது என்ன வேடிக்கையாயிருக்கிறதே! ஒரு நாளிலே எப்படி இறந்தார்கள்?"

"அதை ஏன் கேட்கிறீர்கள்? அவர்கள் எல்லாம் அடுத்த ஊரில்தான் இருந்தார்கள். பெரிய குடும்பம். இந்தப் பெண்ணுக்கு மாணிக்கம் என்று பெயர். தாயில்லாத பெண்ணை அவள் தகப்பனார் எவ்வளவோ செல்லமாக வளர்த்து வந்தார்......"

[இப்படிக் கிழவி சொல்லிக் கொண்டிருக்கும்போது, "பாட்டி! அதைப் பாரு!" என்று மாணிக்கம் கத்தினாள். நான் திடுக்கிட்டுத் திரும்பிப் பார்த்தேன். அவள் சுட்டிக் காண்பித்தது மூலையிலிருந்த அந்த விளக்கைத்தான்.

"பாட்டி! விளக்கிலே எண்ணெய் இருக்கா?" என்றாள் மாணிக்கம்.

"நிறைய இருக்கே! கவலைப் படாதே!" என்று சொல்லிவிட்டுக் கிழவி மேலே சொல்லத் தொடங்கினாள்:]

"கேட்டீர்களா! மாணிக்கத்துக்குப் பதினைந்து வயசு இருக்கும். முத்துப் பேட்டை ஐம்புலிங்கத் தேவர் — அவர் பெயரைக் கேள்விப்படாதவர் யார்? அவர் பேரைச் சொன்னாலே அழுத பிள்ளை வாயை மூடும்—மாணிக்கத்தைத் தமக்குக் கட்டித் தரும்படி சற்குணத் தேவரைக் கேட்டாராம். சற்குணத் தேவர் தயங்கவே யில்லை. அந்தக் குடிகாரனுக்கு யார்தான் பெண்ணைக் கொடுக்கச் சம்மதிப்பார்கள்? 'உமக்குப் பைத்தியமா பிடித்திருக்கிறது, என் பெண்ணைக் கட்டித் தரும்படி கேட்க?' என்று பளிச்சென்று பதில் சொல்லிவிட்டார் சற்குணத் தேவர். அடுத்த கிராமத்தில் ஆறுமுகத் தேவர் என்று ஒரு மிராசுதார் இருந்தார். ரொம்ப நல்ல மனுஷர்; அவருக்கு மாணிக்கத்தைக் கொடுக்க வேண்டுமென்று சற்குணத் தேவருக்கு வெகு நாளாக எண்ணம். ஆகவே அவருக்கு மாணிக்கத்தைக் கொடுக்கிறதாக நிச்சயமாகி, கல்யாணத்துக்கு நாளும் பார்த்தாகி விட்டது.

"ஆனால் குழந்தைக்கு இரண்டிலேயும் இஷ்டமில்லை. செல்லமுத்து என்று ஒரு பிள்ளையாண்டான் பக்கத்துத் தெருவிலே இருந்தான். 'அவனைக் கல்யாணம் பண்ணிக் கொள்கிறது; இல்லையானால் உயிரை விட்டு விடுகிறது' என்று மாணிக்கம் பிடிவாதமாக இருந்தாள்.

"கல்யாண நாள் நெருங்கிக் கொண்டே வந்தது. ஐம்புலிங்கத் தேவருக்கு ரொம்ப ரொம்ப ஆத்திரம். கல்யாணத்துக்கு முதல் நாள் அவர் ஆளை விட்டு, சற்குணத் தேவரின் தலையை வெட்டித் தென்னந் தோப்பிலே புதைத்துவிடச் சொல்லி விட்டார். இது

தூங்கா விளக்கு



— வஸந்தன் —

இது ஒரு அதிசயமான கதைதான்; நம்ப முடியாத கதைதான். ஆனால், இந்த மாய உலகத்தில் எதை நம்புவது, எதை நம்பாமல் இருப்பது? நேரே, நம் கண்ணுக்கு எதிரே காணும் சில சம்பவங்களையே நாம் நம்ப முடிவதில்லை; பல சமயம் நம் கண்களே நம்மை வஞ்சித்து விடுகின்றன. என் சிநேகிதர் மேற்கண்ட சம்பவத்தைக் கூறிக் கொண்டே வந்தபோது, சிற்சில இடங்களில், 'இப்படியும் நடக்குமா?' என்றுதான் எனக்கும் தோன்றிற்று. ஆனால், அவர், "ஸார்! இதை நான் என் கண்ணாலே பார்த்தது, இந்தக் காதாலே கேட்டது. அதெல்லாம் பொய்யாக இருக்கும் பட்சத்தில் இப்பொழுது நான் உங்களுடன் பேசிக்கொண்டு இருப்பது கூடப் பொய்யாகத்தான் இருக்கவேண்டும். நீங்கள் இப்பொழுது உயிரோடு இருப்பதுகூடப் பொய்யாகத் தான் இருக்கவேண்டும்!" என்றார்.

நான் உயிரோடு இருப்பது வாஸ்தவம் தான் என்பதை நிரூபிப்பதற்காக வாவது, அவர் கூறிய அதிசய சம்பவத்தை இங்கே எழுதுவது அவசியமாகி விட்டது!

அவர் கூறிய கதை இதுதான்:

2

தஞ்சை ஜில்லாவிலுள்ள தம்பிக் கோட்டை என்ற ஊரைப்பற்றி நீங்கள் கேள்விப் பட்டிருக்கலாம். தம்பிக் கோட்டையில் கோட்டையோ கொத்தளமோ ஒன்றும் கிடையாது. தென்னஞ் சோலைகள் சூழ்ந்த சிறு கிராமம் தான் அது. மூன்று வருஷத்துக்கு முன்னால் அவ்வூரில் நான் டாக்டராக இருந்தேன். டிஸம்பர் மாதம் பத்துப் பதினைந்து தேதிகள் இருக்கும்—எனக்கு நன்றாக ஞாபகம் இருக்கிறது.

அன்று சாயங்காலம் வீட்டு வாசலில் சாய்வு நாற்காலியில் உட்கார்ந்து வெற்றிலை பாக்குப் போட்டுக் கொண்டிருந்தேன். தென்னை மரங்களின் வழியாகச் சூரியன் மேகக் குவியலுக்குள் மறைந்து கொண்டிருந்தான். இலேசான பனிப் புகை எங்கும் பரவத் தொடங்கிற்று. அப் பனிப் புகையுடன் அந்தகாரமும் வந்து உலகை விழுங்கப் பார்த்துக் கொண்டிருந்தது.

உள்ளே போகலாம் என்று எழுந்தேன். "ஸார்! டாக்டர் ஸார்!" என்ற படபடத்த குரலைக் கேட்டுச் சட்டென்று திரும்பிப் பார்த்தேன். உள்ளூர் கிராம முன்சீப் நின்று கொண்டிருந்தார்.

"டாக்டர்! ஒரு அவசரமான கேஸ்! தாங்கள் உடனே கவனிக்கவேண்டும்!" என்று என்னைக் கேட்டுக் கொண்டார்.

"யாருக்கு என்ன உடம்பு?" என்றேன்.

"அதோ அரை பர்லாங்கு தூரத்திலே ஒரு தென்னந்தோப்பில் ஒரு பெண்ணுக்குச் சுரமாம். இப்பொழுதுதான் எனக்கு விஷயம் தெரிந்தது. அவள் புருஷன் பட்டாளத்தில் இருக்கிறான். பாவம், அவளைக் கவனிக்க வேறு யாரும் இல்லை" என்றார்.

நான் உள்ளே போய் மருந்துப் பெட்டியைக் கையில் எடுத்துக்கொண்டு நோயாளியின் வீட்டுக்குக் கிளம்பினேன். என்னை ஒரு சிறு குடிசை வாசலுக்கு அழைத்து வந்து "இந்த வீடுதான்! உள்ளே போங்கள்!" என்றார் கிராம முன்சீப்.

அவர் போகாமல் என்னை மட்டும் உள்ளே போகச்சொன்ன மர்மம் உடனே தெரிந்தது. அந்தக் குறுகலான வாசற்படியில் நுழைந்து உள்ளே போவது எனக்கே சிரமமா யிருந்த போது, அவருக்குக் கேட்பானேன்?

குடிசைக்குள், கீழே அந்தப் பெண் படுத்திருந்தாள். அவள் அருகில் ஒரு கிழவி உட்கார்ந்து கொண்டிருந்தாள்.

நவீன ராஜ தர்பார்

"சாவி"

காலம்: பிற்பகல் (புது மணிப்படி) மணி ஆறு.

[அரசனுக்குப் பொழுது போகவில்லை. ராஜ சபையில் வந்து சிம்மாசனத்தில் அமருகிறார்.]



அரசன் :—மந்திரி !

சேவகன் (பயபக்தியுடன்):— பிரதம மந்திரிக்கு அவகாசமில்லை. அவர் பார்லிமெண்டில் நீண்ட பிரசங்கம் செய்து கொண்டிருக்கிறார்.

அரசன் :—என்ன ? மற்ற மந்திரிகள் கூடவா இல்லை ? அவர்கள் எல்லாம் எங்கே ?

சேவகன் :—அவர்களும்தான் பார்லிமெண்டு கூட்டத்துக்குப் போயிருக்கிறார்கள்.

அரசன் :—இன்றைக்கு என்ன கூட்டம் ?

சேவகன்:—ஏதோ யுத்த 'பட்ஜெட்'டாம். பிரதம மந்திரி சொல்லுவதற்கெல்லாம் மற்ற மந்திரிகள் கைதூக்கப் போயிருக்கிறார்கள்.

அரசன் :—சீச்சீ ! இதென்ன ராஜாங்கம் வேண்டிக் கிடக்கிறது ? மந்திரிகள் சொல்படி அரசன் ராஜாங்கம் நடத்துவதாம். முன் காலத்தில் அரசர்களெல்லாம் இப்படியா அரசாங்கம் நடத்தினார்கள் ? சரி ; இப்போது நாமாவது ராஜதர்பாரை நடத்துவோம். நான் கேட்ட கேள்விகளுக்குப் பதில் சொல்லுவாயா ?

சேவகன் :—அப்படியே மகாராஜா !

அரசன் (கனைத்துக் கொண்டு) :— நமது தேசத்தில் குடிகளெல்லாம் சௌக்யமா ?

சேவகன் :—ரொம்ப சௌக்யம் பிரபு ! குடிகளெல்லாம் சௌக்யமாகக் குடித்துக் கொண்டு சந்தோஷமாய் தெருவில் புரண்டு கொண்டிருக்கிறார்கள் !

அரசன் :—ஹும் ! மாதம் தவறாமல் மூன்று தடவைகளாவது தேசத்தில் குண்டுமாரி பொழிந்து கொண்டிருக்கிறதா ?

சேவகன் :—மூன்று முறையென்ன, முப்பது முறைகூடப் பொழிந்து கொண்டிருக்கிறது மகாராஜா.

அரசன் :—ஏ. ஆர். பீ. சங்குகளெல்லாம் காலா காலத்தில் ஊளை விட்டுக் கொண்டிருக்கின்றனவா ?

சேவகன் :—சில முக்கிய சமயங்களைத் தவிர மற்றப் போதெல்லாம் சரியாகவே ஊதுகின்றன.

அரசன் :—சிற்றரசர்களெல்லாம் சரியானபடி யுத்தநிதிக்குப் பணம் சேகரித்து அனுப்பிக் கொண்டிருக்கின்றார்களா ?

சேவகன்:—கோடிக் கணக்கில் அனுப்புகிறார்கள்.

அரசன் :—நாட்டில் 'ரேஷன்' ஏற்பாடுகளெல்லாம் வெற்றிகரமாகச் செய்து முடித்து விட்டார்களா ?

சேவகன் :—ரொம்ப அழகாய்ச் செய்து முடித்திருக்கிறார்கள். ஜனங்களெல்லாரும் வர்ணக் கார்டுகளை வைத்துக் கொண்டு கட்டைக்கும் அரிசிக்கும் அலையும் காட்சி ஒன்றே போதும் பிரபு.

அரசன் :—ரயில் பிரயாணிகள் உல்லாச யாத்திரை செய்கிறார்களா ?

சேவகன் :—மகா உல்லாசம் ! டிக்கட் வாங்கும்போதும் ரயிலில் ஏறும்போதும் அவர்களுடைய உல்லாசம் அதிகரித்துப் போய் ஒருவரையொருவர் கட்டிப் பிடித்துக்கொண்டு ஏறுகிறார்கள் மகாராஜா !

அரசன் :—அப்படியா ? இதையெல்லாம் கேட்டு நான் மிகவும் பூரிப்படைகிறேன். சரி ; நேரமாகிறது. தர்பாரைக் கலைப்போமா ?

சேவகன் :—மகாராஜாவிடம் ஒரு விண்ணப்பம்.

அரசன் :—என்ன அது ?

சேவகன் :—நாட்டில் உணவுப் பஞ்சம் தாண்டவமாடுகிறது. எல்லா ஆபீஸ்களிலும் பஞ்சப்படி கொடுக்கிறார்கள். எனக்கும் மகாராஜா ......

[பல்லைக் காட்டுகிறான்.]

அரசன் :—ஐயையோ, என்னைக் கேட்காதே ! அதெல்லாம் இந்த மந்திரி சபை பாடு உன்பாடு.



[சட்டென்று ராஜா திரைக்கும் பின்னுக்கு ஓடி மறைந்து விடுகிறார்.]

மிகப் பத்திரமுள்ள சேமிப்புத் திட்டம்

யுத்தம் நின்று, சமாதானம் நிலவும் போது சேமித்த பணமெல்லாம் மாயமாக மறையுமென்றால், வருங்காலத்திற்காக சேமிப்பதின் பயன் என்ன? தங்கம், வெள்ளி, நகைகள் வீடு வாசல்கள், விற்பனைச் சரக்குகள் வாங்குவதில் உங்கள் சேமிப்பை முதலிட்டால், உங்கள் பணத்திற்கும் இக்கதிதான் நேரும். இப்பொழுதிருந்தே இந்தப் பொருள்களின் அநியாய விலைகள் சாதாரண அளவுக்கு இறங்குமென்று எதிர்பார்க்கலாம். உங்கள் சேமிப்பு அப்பொழுது என்ன ஆகும்?

யுத்த காலத்தில் விஷயம் தெரியாதவர்கள் விலை யேற்றத்தைக் கவனியாமல் தங்கம், வெள்ளி. வீடு வாசல்களை கண்ணை மூடிக் கொண்டு வாங்குவதால் ஏராளமான பணத்தை இழக்கிறார்கள் என்பதை எல்லோரும் அறியவேண்டியது அவசியம். நீங்கள் இம்மாதிரியான நஷ்டத்திற்கு ஈடாகாதீர்கள். மிச்சப்படுத்தும் பணத்தைக் கொண்டு நாஷனல் சேவிங்ஸ் சர்ட்டிபிகேட்டுகளை வாங்குங்கள். இந்த சர்ட்டிபிகேட்டுகள் ஒவ்வொன்றும் ரூபாய் 10 தான். 12 வருஷங்களுக்குப் பிறகு அதன் உத்திரவாதமுள்ள மதிப்பு ரூபாய் 15.

முதல் மூன்று வருஷங்களுக்குப் பிறகு எப்பொழுது வேண்டுமானாலும் நாஷனல் சேவிங்ஸ் சர்ட்டிபிகேட்டுகளை பணமாக மாற்றிக் கொள்ளலாம். இந்த சர்ட்டிபிகேட்டுகளில் முதலிட்ட தொகைகளுக்கு வருமான வரி கிடையாது. ஒவ்வொருவரும் ரூ. 5,000 வரைக்கும் இந்த சர்ட்டிபிகேட்டுகளை வாங்கலாம்.

நாஷனல் சேவிங்ஸ் சர்ட்டிபிகேட்டுகளை

வாங்கிச் சேமித்த பணம்

என்றும் பத்திரமானது

பதிவு செய்தல் — ஒரு நல்ல முன்னேற்பாடு.

அஸாம், வங்காளம், பீஹார், ஒரிஸா, சென்னை மாகாண வாசிகளின் சௌகரியத்துக்காக, லக்ஷ்மணபுரியில் ஐக்கிய மாகாண போஸ்ட் மாஸ்டர் ஜெனரலின் மேற்பார்வையில் ஒரு மத்தியப் பதிவு ஆபீஸ் ஏற்படுத்தப்பட்டிருக்கிறது. இங்கு டிபென்ஸ் சேவிங்ஸ் சர்ட்டிபிகேட்டுகள், தபாலாபீஸ் காஷ் சர்ட்டிபிகேட்டுகள், நாஷனல் சேவிங்ஸ் சர்ட்டிபிகேட்டுகளை வைத்திருப்பவர்கள் தங்கள் சர்ட்டிபிகேட்டுகளின் விபரங்களை இலவசமாகப் பதிவுசெய்து கொள்ளலாம். இதன் மூலம், சர்ட்டிபிகேட்டுகள் காணாமற் போனாலுஞ் சரி, அழிந்து விட்டாலுஞ் சரி, தங்கள் உரிமையை நிரூபிப்பது சுலபம். பூரா விபரங்களையும் உங்களூர் தபாலாபீஸில் கேட்டுத் தெரிந்து கொள்ளுங்கள்.

ஸேவிங்ஸ் பாங்க் உள்ள எந்தத் தபாலாபீஸிலும் நாஷனல் சேவிங்ஸ் சர்ட்டிபிகேட்டுகளை வாங்கலாம்.

CPU—415

"கல்கி" சிறு கதைப் போட்டி

பரிசு ரூ. 1000

முதல் பரிசு ரூ. 500; ஐந்து பரிசுகள் ஒவ்வொன்று ரூ. 100

1. தமிழ் நாட்டில் அதிசயமான இலக்கிய மறு மலர்ச்சி ஏற்பட்டிருக்கிறது. "எழுத வேண்டும்" "எழுத வேண்டும்" என்று எத்தனையோ இளம் எழுத்தாளர்கள் துடித்துக் கொண்டிருக்கிறார்கள். அவர்களுடைய ஊக்கமும் உற்சாகமும் நல்ல முறையில் பயன்படுமாறு "கல்கி" இந்தச் சிறு தொண்டைச் செய்ய முன்வந்திருக்கிறது.

2. இந்தப் பரிசுத் திட்டத்துக்காக அனுப்பப்படும் கதைகள் தமிழ் நாட்டு மக்களின் வாழ்க்கையை அடிப்படையாகக்கொண்ட புதுக் கற்பனைகளாக இருக்க வேண்டும். மொழிபெயர்ப்புக்களும், தழுவி எழுதிய கதைகளும் இந்தப் பரிசுத் திட்டத்தில் சேர்த்துக்கொள்ளப்படமாட்டா.

3. கதையின் நீளம் "கல்கி"யில் ஐந்து பக்கம் முதல் பன்னிரண்டு பக்கத்துக்குள் அடங்குவதா யிருக்க வேண்டும்.

4. ஒரே ஆசிரியர் இரண்டு கதைகள் அனுப்பி வைக்கலாம். அதற்கு மேல் அனுப்பக்கூடாது.

5. 1944-ம் வருஷம் ஏப்ரல்மீ 30உக்குள் "கல்கி" காரியாலயத்துக்கு வந்து சேர வேண்டும். கவரின் மேல் "சிறு கதைப் போட்டி" என்று குறிப்பிட வேண்டும்.

6. பின் வரும் தமிழன்பர்கள் அடங்கிய பஞ்சாயத்தார் பரிசுக்குரிய கதைகளைத் தேர்ந்தெடுப்பார்கள். அவர்களுடைய தீர்ப்பே முடிவானது.

1. ஸ்ரீ டி. கே. சிதம்பரநாத முதலியார்.
2. ஸ்ரீமதி எஸ். அம்புஜம்மாள்
3. கே. சந்திரசேகரன், பி. ஏ., பி. எல்.
4. க. நா. சுப்பிரமண்யம் ("சூறாவளி" ஆசிரியர்)
5. ஆசிரியர், "கல்கி"

7. எல்லாவற்றிலும் சிறந்ததென்று பஞ்சாயத்தார் கருதுகிற கதைக்கு முதல் பரிசு ரூ. 500 அளிக்கப்படும். அடுத்தபடியாக ஐந்து கதைகளுக்கு ஒவ்வொன்றுக்கும் ரூ. 100 வீதம் அளிக்கப்படும். பரிசு பெற்ற கதையின் 'காபிரைட்' உரிமை "கல்கி" காரியாலயத்தைச் சேர்ந்தது.

8. பரிசு பெறாத கதைகளில் பிரசுரத்துக்குத் தகுதியான கதைகள் பிரசுரத்துக்கு எடுத்துக்கொள்ளப்படும். அவற்றுக்கு உசிதமான சன்மானம் வழங்கப்படும். பரிசு பெறாமல் பிரசுரத்துக்கு மட்டும் எடுத்துக் கொள்ளப்படும் கதைகளின் 'காபிரைட்' உரிமை கதை ஆசிரியர்களுடையது.

9. முதற் பரிசு பெற எந்தக் கதையும் தகுதியற்றதென்று பஞ்சாயத்தார் கருதினால், முதற் பரிசுத் தொகை பஞ்சாயத்தாரின் உசிதம்போல் பிரித்துக் கொடுக்கப்படலாம்.

10. இந்தப் போட்டி சம்பந்தமான விதிகளை மாற்றவும், திருத்தவும் "கல்கி" ஆசிரியருக்கு உரிமை உண்டு.

11. சந்தேகம் ஏற்படும் எந்த விஷயத்திலும் "கல்கி" ஆசிரியர் தீர்ப்பே முடிவானது.

டி. சதாசிவம்

மானேஜர், "கல்கி"



காலக்ஷேபம்

எல்லாந் தெரியும்!

ஒரு பாடகர், பாட்டுப் பாடி வெகுமதி யடைய, ஒரு தனவானின் வீட்டிற்குச் சென்றார்.

தனவான்:—பாடகரே, உமக்குப் ‘பல்லவி’ பாடத் தெரியுமா?

பாடகர்:—பிரபுவே, என்னை என்ன அவ்வளவு கேவலமாக நினைத்து விட்டீர்கள்? பல்லவி, அனுபல்லவி, சரணம் எல்லாம் நான் பாடுவேன்.

—ஏ. சைலபதி.

●

நம்பிக்கை!

வேலைக்காரன்:—என்னைத் தாங்கள் நம்புவதில்லை. நான் வேலையை விட்டு விடப் போகிறேன்.

எஜமான்:—உன்னையா நான் நம்புவதில்லை? என் கொத்துச் சாவியைக் கூட உன்னிடம் தானே கொடுத்து வைத்திருக்கிறேன்?

வேலைக்காரன்:—ஆனால் சாவி ஒன்றாவது சரியாக இல்லையே.

—எஸ். துரை ஐயர்.

●

கட்டிய காரணம்!

ஒரு கூட்டத்தில் கல் வந்து விழுந்தது. அதிலிருந்த ஒருவர் மிகவும் விரைவாய்த் தம் மேல்வேஷ்டியை எடுத்துத் தலையில் கட்டினார்.

பக்கத்திலிருந்தவர் (அவரிடம்):—வேண்டாம்! வேண்டாம். தொலைந்து போகிறான் சார். யாராவது விஷமக் காரப் பயலாய் இருக்கும்.

முதல் மனிதர்:—நான், அவனை ஒன்றும் செய்யப் போகவில்லை சார்! கல் என் தலையில் விழாமலிருப்பதற்கல்லவோ வேஷ்டியைத் தலையில் கட்டினேன்?

—எம். எம். கே.

மாறவில்லை!

ஒரு நாடகக் கொட்டகையில் “இடம் மாறி உட்காருபவர்களிடம் இரட்டிப்பு சார்ஜ் வசூலிக்கப்படும்” என்று எழுதியிருந்தது.

ஒருவர் பெஞ்சுக்கு டிக்கெட் வாங்கிக் கொண்டு, நாற்காலியில் உட்கார்ந்திருந்தார்!

டிக்கெட் பரிசோதகன், அவரைப் பார்த்து ஒரு முறைப்பு முறைத்து விட்டு, அந்தப் போர்டை அவருக்குச் சுட்டிக் காட்டினான்.


“நான் வந்தது முதல் இதே நாற்காலியில்தான் உட்கார்ந்திருக்கிறேன்; வேறு எந்த இடத்திற்கும் மாறவில்லை, ஸார்!” என்றார் அவர்.

—எம். முத்துகிருஷ்ணன்.

●

கொடுத்த வேலை!

ஆபீஸ் மானேஜர் கம்பெனியைச் சுற்றி வந்து கொண்டிருந்தார். அப்பொழுது புதிதாக வந்த பையனைப் பார்த்து, “நீ எப்பொழுது வேலைக்கு வந்தாய்? குமாஸ்தாவைப் பார்த்தாயா?



என்ன வேலை கொடுத்தார்?” என்று விசாரித்தார்.

பையன் சிறிது தயங்கி விட்டு, “தாங்கள் இந்தப் பக்கம் வந்தவுடன் அவரைத் தட்டி எழுப்பச் சொன்னார்!” என்றான்.

—டி. எஸ். கணேசன்.

அப்பொழுது மகா ஆடம்பரத்துடன் வெகு தூரத்துக்கு அப்பாலிருந்து ஒரு அரசகுமாரன் ஸெபுனிஸாவைப் பார்க்க வருவதாகச் செய்தி கிடைத்தது. அந்த அரசகுமாரனையும் ஓடவிட்டு வேடிக்கை பார்ப்பதற்காகக் காத்துக் கொண்டிருந்தான் ஸெபு.

ஆனால், அந்த அரசகுமாரன் எப்படி வந்து கொண்டிருந்தான் தெரியுமா? ஒரு ஆமை பூட்டிய வண்டியில் மெதுவாக வந்து கொண்டிருந்தான். அவ்வண்டி அரண்மனை வாயிலை அடைந்தவுடன், அவன் வண்டியில் ஆமை பூட்டியிருப்பதைப் பார்த்துப் பரிகாசம் செய்தான் ஸெபுனிஸா.

"ஆமை வண்டிக்காரா! இதில் ஏறிக்கொண்டு வந்தால் உன்னை ஓடச் செய்ய முடியாது என்று எண்ணிக் கொண்டாயா? இதோ அரை நொடியில் உன் வண்டி எங்கே போகிறது, பார்!" என்று சொல்லிக் கொண்டே ஸெபுனிஸா மோதிரத்தைத் தேய்த்தான். ஆனால் ஆமை நகராமல் அசைவற்று நின்றது. மறுபடியும் ஸெபு மோதிரத்தை நன்றாகத் தேய்த்துக் கொண்டே, "ஆமையே! நாலு கால் பாய்ச்சலில் ஓடு!" என்று சொன்னாள். ஆமையாவது நகருகிறதாவது?

ராஜகுமாரன் ஸெபுனிஸாவைப் பார்த்துப் பரிகாசமாகச் சிரித்தான். அவளுக்குப் பிரமாதமாகக் கோபம் வந்தது. அந்த ஆத்திரத்தில் "இதோ ஆமையை ஓடச் செய்கிறேன், பார்!" என்று மோதிரத்தைக் கழற்றி "ஓடு" என்று சொல்லிக் கொண்டே ஆமை மீது விட்டெறிந்தான்! அப்பொழுது, ஆமை ஓடுவதற்குப் பதிலாக அந்த மந்திர மோதிரம் அரசகுமாரி கையில் அகப்படாமல் அவ்விடத்தை விட்டு உருண்டு கொண்டே ஓடிவிட்டது!

அப்பொழுது ஓர் அதிசய சம்பவம் நடந்தது. ஆமை யிருந்த இடத்தில் ஆமையைக் காணவில்லை. அதற்குப் பதிலாக அரச குமாரிக்கு மோதிரம் கொடுத்த மந்திரவாதி நின்றான்! அவனைப் பார்த்த அரசகுமாரி திகைத்துப் போனாள். உடனே மந்திரவாதி அரச குமாரியைப் பார்த்து, "ஸெபு! மோதிரத்தைப் பிறர் நன்மையை உத்தேசித்து உபயோகிக்கும்படி உன்னிடம் சொன்னேன். ஆனால் நீ அதை வைத்துக் கொண்டு அசட்டுக் காரியங்களை செய்ய ஆரம்பித்து விட்டாய். ஆதலால் அம் மோதிரத்தை உன்னிடமிருந்து பெறவே இந்த உபாயம் செய்தேன். நீ இதோ இருக்கும் அரச குமாரனைக் கலியாணம் செய்து கொண்டு சுகமாக இரு" என்று சொல்லிவிட்டு மறைந்தான்.

ஸெபுனிஸாவின் கர்வம் தணிந்தது. ஸெபுவுக்கும் ராஜகுமாரனுக்கும் வெகு விமரிசையாகக் கலியாணம் நடந்தது.





வெள்ளி மோதிரம்

ராஜி



[சென்ற இதழின் தொடர்ச்சி]

இதைப் பார்த்த நவாபுக்குக் கோபம் தாங்க முடியவில்லை. தம் புதல்வியைக் கூப்பிட்டு, "வெள்ளி மோதிரத்தை என் கையில் கொடுக்கிறாயா, இல்லையா?" என்று கண்டித்துக் கேட்டார். ஆனால் ஸெபுனிஸா மோதிரத்தைக் கொடுக்க மறுத்தாள். கோபமடைந்த நவாப், "யார் என் மகளிடமுள்ள வெள்ளி மோதிரத்தை வாங்கி என்னிடம் கொடுக்கிறார்களோ அவர்களுக்கு என் பெண் ஸெபுனிஸாவைக் கலியாணம் செய்து கொடுப்பேன்" என்று தண்டோரா போடச் செய்தார்.



அதைக் கேட்ட ஸெபுனிஸா சிரித்துக் கொண்டே, "யார் என்னிடம் வருகிறார்கள் என்று பார்க்கலாம்" என்று சொன்னாள். நவாபின் உத்தரவைக் கேட்ட பல அரச குமாரர்கள் ராஜ குமாரத்தியினிடமிருந்து எப்படியாவது மோதிரத்தைப் பெற்று அவளைக் கலியாணம் செய்து கொள்ள வேண்டும் என்று வங்காளத்துக்கு வந்தார்கள். அந்த அரச குமாரர்களைப் பார்த்ததும் ஸெபுனிஸா "இவர்கள் இவ்விடத்தை விட்டு வேகமாக ஓடட்டும்" என்று நினைத்து மோதிரத்தைத் தேய்த்தாள். அடுத்த நிமிஷம் ஸெபுனிஸாவைப் பார்க்க வந்த அரசகுமாரர்கள் தங்கள் குதிரைகளை நாலு கால் பாய்ச்சலில் விட்டுக்கொண்டு ஓட ஆரம்பித்தார்கள். அவ்விதமே, வந்த அரசகுமாரர்கள் யாவரும் ஒருவர் பின் ஒருவராக ஓட ஆரம்பித்தார்கள். அவர்களைப் பார்த்து ஸெபுனிஸா கைகொட்டிச் சிரித்தாள்.

இதுதான் ஜப்பானியர் செய்யக்கூடியது!

உலகிலுள்ள ஒவ்வொரு நாட்டுக்கும் குறிப்பான விசேஷ குணங்கள் உண்டு. ஆசியவாசிகளில் இந்தியராகிய நாம் அமைதியை விரும்புபவர்கள். சுறுசுறுப்பாக உள்ளவர்கள், பொறுத்துப் போகக்கூடியவர்கள். பழைய பெருமைகளில் மூழ்கியவர்களாக இருப்பினும் வருங்காலத்தில் வெகு குறியாக இருப்பவர்கள். சீனக்காரரோ இப்பொழுதுதான் புத்துயிர் பெறுகிறார்கள். மனித சமூகத்தில் தமக்கு ஒரு இடம் பெறத் தேவையான வீரம், தைரியம், அன்பு முதலியவற்றைப் பெற்றிருக்கிறார்கள்.

ஆனால் ஜப்பானிய பாஸிஸ்டுகளோ?



என்ன இழிவான சாதனை செய்திருக்கிறார்கள்! ஆசியவாசிகளுக்கு எத்தகைய கெட்ட பெயரைத் தேடித் தந்திருக்கிறார்கள். கொடூரமானவர்கள், டம்பக்காரர்கள், துரோகிகள், எதையும் மற்றவர்களைப்போல் செய்ய பார்ப்பவர்கள், புதியவற்றை தாமாகச் செய்ய இயலாதவர்கள். அவர்களுடைய இழி குணங்களுக்குச் சிகரம் போன்றது அவர்களுடைய அகம்பாவம். "கடவுள் ஆணையால் நாங்கள் உலகத்தை வென்றவர்கள். நாங்கள் குற்றமே செய்யாதவர்கள்." இதுவே அவர்கள் சொல்லுவது மட்டுமல்ல பூராவாக நம்புவதும் இதுவே.

இத்தகைய நாட்டினரை நசுக்க ஒரே வழிதானுண்டு. அவர்களுடைய பலத்தைப் பிடுங்க வேண்டும். விஷமம் செய்யாதபடி அவர்களுடைய பற்களைப் பிடுங்க வேண்டும். ஒரே வார்த்தையில் சொல்லப்போனால் "அவர்கள் நிபந்தனையின்றி சம்பூர்ண சரணாகதியடைய வேண்டும்." அதற்குக் குறைந்தது உதவாது.

AAA. 570 TM.

"என்ன இருந்தாலும் நீங்கள் அதிருஷ்டசாலிதான்!" என்று விசாலம் கணவன் கன்னத்தைத் தொட்டு நெட்டி முறித்தபோது ஜகதீசய்யர், "ஐயோ! ஐயோ!" என்று கூவினார். "சந்தோஷமாக இருக்க வேண்டிய சமயத்திலே எதற்காக இப்படி அபசகுனம் மாதிரி கத்தறேள்?" என்றாள் விசாலம்.

"ஐயோ! இது யாருடைய பணமோ தெரியவில்லையே. பாவம், இந்த சமயத்தில் பணத்தைத் தொலைத்தவன் என்ன பாடு படுகிறானோ!" என்றார் ஜகதீசய்யர். "விசாலம்! தொலைத்தவனிடம் இதைத் திருப்பிக் கொடுத்துவிட்டால் என்ன? பத்திரிகையில் சின்ன விளம்பரம் போடுகிறேன். இதைத் தொலைத்தவன் அடையாளம் சொல்லிவிட்டுப் பையை வாங்கிக்கொண்டு போகட்டும்!" என்றார். "அழகாயிருக்கு, பைத்தியந்தான்!" என்று சொல்லி விசாலம் பணப் பையை வாங்கிக் கொண்டு உள்ளே போனாள்.

★ ஆனால், மறுநாள் பத்திரிகையில் ஜகதீசய்யர் கண்டெடுத்த பணப் பையைப் பற்றின விளம்பரம் வந்தது. பணத்தைப் பறி கொடுத்தவர் ஜகதீசய்யர் வீட்டைத் தேடி வந்தார்.

"ஸார்! ஜகதீசய்யர் வீடு இதுதானே? என் பணப் பையை ..?" என்று கேட்டுக் கொண்டே அவர் உள்ளே வந்தார்.

"ஆமாம்; வாருங்கள்!" என்று வந்தவரை வரவேற்றார் ஜகதீசய்யர்.

விசாலத்துக்குத் தூக்கி வாரிப்போட்டது. சொன்னது மாதிரியே அகத்துக்காரர் செய்து விட்டார் என்று தோன்றி விட்டது. அவளுக்கு என்ன சொல்வதென்றே புரியவில்லை. வந்தவரைப் பார்த்து, "ஐயா, இப்படி இங்கே வாருங்கோ! இங்கே பணப் பையுமில்லை, ஒன்றும் இல்லை. அவர் சொல்றதைக் கேட்காதேயுங்கோ! அவருக்குப் பைத்தியம் பிடித்திருக்கிறது!" என்றாள் விசாலம்.

வந்தவர் நிஜமாகவே பீதியுடன் ஜகதீசய்யரை ஏற இறங்கப் பார்த்தார். ஆனால் ஜகதீசய்யர் அவரைப் பார்த்து, "ஸார்! எனக்குப் பைத்தியமும் இல்லை ஒன்றும் இல்லை. அவள் சொல்வதைக் கேட்காதீங்கோ! நான் அன்னிக்கி ராத்திரி 'டியூஷன்' வாசிச்சுட்டு வந்து கொண்டிருந்தேன் ..."

"என்ன? நீங்கள் டியூஷன் வாசித்தீர்களா?" என்று கலவரத்துடன் கேட்டார் வந்தவர். அப்பொழுது அவர் விசாலத்தைப் பார்த்தபார்வை, "நீங்கள் சொன்னது சரிதான் போலிருக்கு" என்று சொல்வதுபோல் இருந்தது.

"ஆமாம், ஸார்! சேஷய்யர் ஆத்துலே ஏ. பி. ஸி. டி. படித்துவிட்டுத் திரும்பி வந்து கொண்டிருந்தேன் ......"

இந்த சமயத்தில் வந்தவர் பீதியுடன் மெதுவாகத் திரும்ப ஆரம்பித்தார்.

"ஸார்! ஏன் போறேள்? இதை வாங்கிக் கொண்டு போங்கோ!" என்று சொல்லிக் கொண்டே ஜகதீசய்யர் பின் தொடர்ந்ததும் வந்தவர் ஒரு துள்ளுத் துள்ளிக் குதித்து ஓட ஆரம்பித்தார். அவர் ஒரு பர்லாங்கு தூரம் வரை ஓடித்தான் திரும்பிப் பார்த்தார்.

★ "எதுக்காகப் பணத்தை வாங்கிக் கொள்ளாமல் அவர் பைத்தியம் மாதிரி ஓடுகிறார்?" என்று வியப்புடன் கேட்டார் ஜகதீசய்யர் மனைவியைப் பார்த்து.

"அவர் உங்களை நிஜமாகவே பைத்தியம் என்று நினைத்துக்கொண்டு ஓடுகிறார். நீங்கள் ஏ. பி. ஸி. டி. படித்துக் கொண்டிருக்கிறேன் என்று சொன்னேளே, அதைக் கேட்டால் யார்தான் அப்படி நினைக்க மாட்டார்? போகட்டும்; உங்க பிள்ளை ஐ. ஸி. எஸ். படித்துச் சம்பாதிக்கறதுக்குள்ளே நீங்கள் இரண்டு வார்த்தை இங்கிலீஷ் படிச்சுட்டு 3000 ரூபாய் சம்பாதிச்சுட்டேள்! உங்கள் சாமர்த்தியமே சாமர்த்தியம்!" என்றாள் விசாலம்.

வாஸ்தவந்தான்!



மனைவி:—இந்தாருங்க! இந்தச் சிப்பு விஷயத்திலே மட்டும் நீங்க அநாவசியமாகத் தலையிட வேண்டாம் என்று எத்தனை தரம் சொல்லுகிறது?

இரண்டு வார்த்தை இங்கிலீஷ்!

வி. எஸ். ஆர்.

★ "ஸார்! தபால்" என்று தபால்காரன் கூப்பிட்டவுடன், ஜகதீசய்யர் சந்தியாவந்தனம் பண்ணிக் கொண்டிருந்தவர் கையில் பஞ்ச பாத்திரத்துடன் வாசலுக்கு ஓடி வந்தார். காப்பி பில்டரில் வெந்நீரை விடப்போன விசாலம் அப்படியே கெட்டிலைத் தூக்கிக்கொண்டு சமையற் கட்டிலிருந்து வாசலுக்கு ஓடிவந்தாள்.

"யார் கடிதாசு போட்டிருக்கா? குழந்தையா? குழந்தைதானே?" என்று பரபரப்பாகக் கேட்டாள் விசாலம்.

"ஆமாம்; இதோ வருகிறேன். அடுத்தாத்து மணியைக் கூப்பிட்டுக் கொண்டு!" என்று சொல்லிவிட்டு, வாசலில் போய் நின்று கொண்டு, "மணி! மணி!" என்று கூப்பிட்டார் ஜகதீசய்யர்.

ஆறாயிரம் மைலுக்கப்பாலிருந்து அருமைக் குழந்தையிடமிருந்து வந்த கடிதத்தைத் தாம் படித்துக் காண்பிக்காமல் ஜகதீசய்யர் அடுத்தாத்து மணியைக் கூப்பிட்டுப் படிக்கச் சொல்வது விசாலத்துக்குத் தாங்க முடியாத வேதனையாகத்தான் இருந்தது.

ஆனால், அதுமாதிரி இன்று நேற்று நடக்கவில்லை. கோபாலஸ்வாமி ஐ. ஸி. எஸ். படிப்பதற்காக லண்டனுக்குப் போன நாளாக அப்படித்தான் நடக்கிறது. தமிழ் மறந்து போய் விட்ட காரணத்தாலோ, அல்லது இங்கிலாந்தில் இருந்தால் ஆங்கிலத்தில்தான் எழுத வேண்டுமென்ற காரணத்தாலோ கோபாலஸ்வாமி மாதம் ஒரு கடிதம் தகப்பனருக்கு ஆங்கிலத்தில் எழுதி விடுவான். ஆனால் ஜகதீசய்யருக்கு ஆங்கிலம் தெரியாதாகையால் கடிதத்தைத் தூக்கிக்கொண்டு மணியைத் தேடிக்கொண்டு போவார்.

இந்தத் தடவை ஜகதீசய்யர் மணியைக் கூப்பிட்டபோது, விசாலத்திற்குக் கோபம் தாங்கவில்லை.

"இங்கே பாருங்கோ! நீங்கள் அடுத்தாத்து மணியைக் கூப்பிடுகிறபோது எனக்கு நாக்கைப் பிடுங்கிக் கொண்டு பிராணனை விடலாம் போலிருக்கிறது" என்றாள் விசாலம்.

"மணியைக் கூப்பிடாமல் வேறு என்ன செய்கிறது? அவனாவது வந்து படித்துச் சொல்கிறானே என்று சந்தோஷப்பட்டுக் கொண்டிருக்கிறேன்" என்றார் ஜகதீசய்யர்.

"அப்படி ஒன்றும் சந்தோஷப்பட வேண்டாம். நான் சொல்கிறதைக் கேளுங்கோ! நீங்கள் இரண்டுவார்த்தை இங்கிலீஷ் கற்றுக் கொள்ளுங்களேன். லெட்டர் படிக்க யாரையும் போய்க் கெஞ்சவேண்டிய அவசியமே இருக்காது."

"என்ன சொன்னாய்? இங்கிலீஷ் படிக்கவா? அடுத்த வருஷம் சஷ்டியப்த பூர்த்தி. அப்பொழுது எனக்கு வித்தியாரம்பம் செய்து விடலாமோ இல்லையோ!"

"ரொம்பத் தான் கேலி செய்கிறேளே! ஸரஸ்வதி கூட இன்னும் படிச்சிண்டிருக்காளாமே, உங்களுக்கு மட்டும் என்னவாம்? கோடியாத்திலே வாத்தியார் சேஷய்யர் இருக்காரோல்லியோ, அவர்கிட்ட மூணு மாசம் பாடம் சொல்லிக் கொள்ளுங்கோ! உங்களுக்கும் இங்கிலீஷ் வரதா, இல்லையா, பார்க்கலாம்."

★ மனைவி சொல்லைத் தட்டியறியாத ஜகதீசய்யர் அன்று ராத்திரியிலிருந்து தினமும் சேஷய்யர் வீட்டுக்குப் போய் ஆங்கிலம் கற்றுக்கொள்ள ஆரம்பித்தார். ஒரு நாள் இரவு சேஷய்யர் வீட்டில் டியூஷன் சொல்லிக் கொண்டு விட்டு வெளியே வந்தபோது அவர் காலில் 'டக்'கென்று ஏதோ தட்டிற்று. குனிந்து பார்த்தார். ஒரு பை கிடந்தது. எடுத்துப் பார்த்தார்; குலுக்கினார். 'கல்கல்'லென்றது. அது பணப் பை என்று தெரிந்து கொண்டதும் ஜகதீசய்யருக்கு ஆச்சரியம் தாங்கவில்லை. ஓட்டமாக வீட்டுக்கு வந்தார்.

"அடியே! இங்கே வா! ஓடி வாயேன்!" என்று மனைவியைக் கூப்பிட்டார் ஜகதீசய்யர். "இதோ பார்! எனக்குப் புதையல் அகப்பட்டிருக்கிறதடி, புதையல்!" என்று சந்தோஷத்தில் கூவினார்.

விசாலம் "இரையாதிங்கோ! உஷ்!" என்று வாயைப் பொத்திக் காண்பித்துவிட்டு, வாசற் கதவைத் தாளிட்டு விட்டு வந்தாள். பையைத் திறந்து எண்ணியதில் நோட்டும் சில்லறையுமாக ரூ 3000 இருந்தது.


ஒரு
வருஷத்தினுடைய பெரிய
செய்கை
1943
புதிய வேலை
முடிந்துவிட்டது
ரூபாய் 2.80
கோடிக்கு
மேல்

பெரியவாள் கதை

விடுதலை

தம்புடு முத்து அனகாத்திரியிடம் ஆட்சியை விட்டு, சொக்கப்ப நாயக்கன் கதை-புராணங்களில் காலங்கழித்தான். அனகாத்திரி கள்-காமம்-சூதில் காலம் போக்கி ருஸ்தம்கானிடம் அதிகாரத்தைத் தந்தான். ருஸ்தம்கான் பலே பேர்வழி. அவன் அழகான மாதர் வலையில் அனகாத்திரியைச் சிக்க வைத்து, உல்லாசச் சிறையிலடைத்தான். கொழுத்த வைதிகர்களைச் சொக்கப்பனிடம் அனுப்பிப் பரலோகத்தை அண்ணாந்து பார்த்திருக்கச் செய்தான். பிறகு அரண்மனை வாசல் முதல் கொல்லை வரையில் தன் ஆட்களைக் காவல் வைத்தான்; அரசாங்க ஊழியர்களில் தன்னவரை அதிகமாக்கினான்; படையில் தன் இனத்தாரைப் பெருமிதமாக்கினான்; அடுத்தபடி நாட்டைக் கைப்பற்ற முனைந்தான்.

பார்த்தார் தளவாய் கோவிந்தர். நாட்டை இந்தச் சதிகாரனிடமிருந்து விடுவிப்பதெப்படி? ஊணுறக்கமின்றிச் சிந்தையில் ஆழ்ந்திருந்தார். மனைவி காமாக்ஷி "இதற்கென்ன விசனம்? கிழவன் சேதுபதியிடம் ஒரு வார்த்தை சொன்னால் போதுமே" என்றாள். "நல்ல யோசனை" என்று தளவாய் துள்ளியெழுந்து தூதனுப்பினார்.

மறவர் படையுடன் வந்தார் சேதுபதி. "ஹா!" என்றான் ருஸ்தம். ஒரு கண் சிமிட்டு! வீரமறவர் ருஸ்தமைப் பின் கட்டாய்க் கட்டினர்; புலிபோலப் பொருது அவனுடைய ஆட்களை வாளுக்கு விருந்து வைத்தனர். "இனிப் பிடியும் செங்கோலை" என்றார் தளவாய். "ருஸ்தம் மீண்டும் வருவானோ?" என்று நடுங்கினான் சொக்கப்பன். "இதோ பாரும், ஈட்டி முனையில் அவன் தலை!" என்று தளவாய் காட்டினான்.

"சித்தம் சிவனிடம் இருந்தாலும் கையும் வாளிடம் இருக்க வேண்டும்; கண்ணும் காரியத்திலிருக்க வேண்டும்; அறிந்தேன்" என்று நாயக்கர் அரியணையில் அமர்ந்து, தளவாய்க்கும் சேதுபதிக்கும் சன்மானமளித்தார்.

வீட்டைக் கருதாத வேதாந்தம் அன்னியரின்
சேட்டைக் கிடந்தந்து சீரழிக்கும் — நீட்டிய
வீரச் செருக்குடனே வேதவழி சென்றுரே
பார்வாழச் செய்வார் பணி

—ஸ்ரீ சுத்தானந்த பாரதி.

சேராத கடிதம்

●

மகாகனம் பொருந்திய பிரிட்டிஷ் சர்க்காருக்கு,

துரைமார்களே!


நாட்டில் இப்போது நீங்கள் எந்தக் காரியத்தைச் செய்தாலும் அதற்கு 'பணப் புழக்கம் அதிகம்' என்ற ஒரு காரணத்தையே சொல்லுகிறீர்கள். யுத்தக் கடன் பத்திரங்கள் வழங்கி 'லாட்டரி' வைத்தீர்கள். "தேசத்தில் மக்களிடையே பணப் பெருக்கம் அதிகரித்து விட்டது. அவர்களால் தாள முடியாத பளுவைக் குறைக்கவே கடன் பத்திரம் வழங்குகிறோம்" என்று சொன்னீர்கள். ரொம்ப பேஷான காரணம்! அப்புறம் மது விலக்கை ஒழித்துக் கட்டினீர்கள். அதற்கும் 'பணப் புழக்கம்'தான் காரணம் என்றீர்கள்.

இப்போது ரயில்வேக் கட்டணத்தை ஒன்றுக்கு ஒன்றே காலாக உயர்த்தியிருக்கிறீர்கள். இதற்கும் பணப் பெருக்கத்தையே காரணமாகக் கூறுகிறீர்கள். இப்படியெல்லாம் நீங்கள் பணப் பெருக்கத்தைக் குறைக்கக் கஷ்டப்படுவதைக் காண எனக்கு மிகவும் வருத்தமாயிருக்கிறது. நானும் உங்களுடைய இந்தக் கைங்கரியத்தில் சிறிது பங்கெடுத்துக் கொள்ளலாம் என்று பார்க்கிறேன். அதற்கு நீங்கள் கொஞ்சம் ஒத்தாசை செய்தால் போதுமானது. திருடுவது குற்றமென்பதை ரத்து செய்து விடுங்கள். அப்புறம் பாருங்கள், நாட்டில் பணப் பெருக்கத்தை எப்படிக் குறைத்து விடுகிறேன் என்று!

இப்படிக்கு,

ஒரு பக்காத் திருடன்.

(விலாசம்: சொல்ல மாட்டேன்)


ப்ளா-ா-ா-ர்-ர்-ஷ்!

வீர வாலிபனுடையது. உன் கையிலிருந்து வாங்கிக் கொண்டேனே முறிந்த வேல், அதுதான். பிடிமட்டும் புதிதாகப் போட்டிருக்கிறது. அந்த மகா வீரனை நேரில் கண்டு அவனிடம் கொடுக்க வேண்டுமென்று வைத்திருக்கிறேன்."

"அப்புறம் அந்தப் பிள்ளையை நீங்கள் பார்க்கவேயில்லையா?" என்று சிவகாமி கேட்டாள்.

"இல்லையே! மூன்று நாளாக நாடு நகரமெல்லாம் தேடுகிறோம்; அவன் அகப்படவில்லை."

"பிரபு! அவன் இருக்குமிடம் சொன்னால், எனக்கு என்ன தருவீர்கள்?"

"அவன் இருக்குமிடம் உனக்குத் தெரியுமா? நிஜமாகவா? சீக்கிரம் சொல், சிவகாமி! உனக்கு என்னையே தான் கொடுத்திருக்கிறேனே? வேறு என்ன தரப் போகிறேன்?"

"அந்தப் பிள்ளை இப்போது எங்கள் வீட்டில் இருக்கிறான்."

நரசிம்மர் துள்ளி எழுந்து, "என்ன சொல்கிறாய், சிவகாமி! உங்கள் வீட்டிற்கு அவன் எப்படி வந்தான்?" என்று கேட்டார்.

"முன்னே உங்களிடம் சொன்னேனல்லவா, ஒரு புத்த பிக்ஷு அடிக்கடி வந்து அப்பாவையும் என்னையும் வடநாட்டுக்கு வரும்படி அழைத்துக் கொண்டிருக்கிறார் என்று. அந்த நாகநந்தி அடிகள்தான் அந்தப் பிள்ளையை அழைத்து வந்திருக்கிறார்."

"ஆகா! சக்கரவர்த்தி கூறியது உண்மையாயிற்று......சிவகாமி! அவரை உடனே நான் பார்க்க வேண்டும்; கிளம்பு!" என்றார் நரசிம்மர்.

"நாம் இருவரும் சேர்ந்து போகலாமா?" என்று சிவகாமி தயங்கினாள்.

"இல்லை, இல்லை! அதோ கேள்!" என்றார் நரசிம்மர்.

தூரத்தில் பேரிகை முழக்கம், சங்கநாதம், குதிரைகளின் காலடிச் சத்தம் எல்லாம் கலந்து கேட்டன.

"யார், சக்கரவர்த்தியா?" என்று சிவகாமி கேட்டாள்.

"ஆம்; சக்கரவர்த்திதான் வருகிறார். உன்னைப் பார்த்து உன் ஆட்டத்தின் மகிமையைப் பற்றிச் சொல்வதற்கு நாங்கள் இருவருந்தான் கிளம்பினோம். நான் சற்று முன்னால் விரைந்து வந்தேன், ஒரு வேளை உன்னை இங்கே காணலாம் என்ற ஆசையினால். இதோ நான் போய்ச் சக்கரவர்த்தியுடன் சேர்ந்து கொள்கிறேன். நீ சீக்கிரம் வீடு வந்து விடுவாயல்லவா?"

"குறுக்கு வழியாக வந்து விடுவேன், பிரபு! மறுபடியும் தாங்கள் போர்க்களம் போவதற்கு முன்னால் இங்கே வருவீர்கள் அல்லவா?"

"அவசியம் வருகிறேன், சிவகாமி! உன் கரு விழிகளில் ஜொலிக்கும் வேல்கள்—வாள்களின் மேல் ஆணை!" என்று சொல்லி விட்டு நரசிம்மர் திரும்பித் திரும்பிப் பார்த்துக் கொண்டே விரைந்து சென்று குதிரை மீதேறினார்.

அவர் போவதை மலர்ந்த முகத்துடன் பார்த்துக்கொண்டு நின்ற சிவகாமி குதிரை காட்டுக்குள் மறைந்ததும் வீட்டை நோக்கி விரைந்து நடந்தாள். வீட்டிலிருந்து வந்தபோது அவளுடைய நடையில் காணப்படாத மிடுக்கும் குதூகலமும் இப்போது காணப்பட்டன. ரதியை அவள் மறந்து விட்டுச் சென்றாலும், அவள் போவதைப் பார்த்து ரதி பின் தொடர்ந்து துள்ளி ஓடிற்று.

வீட்டின் கொல்லைப்புறத்தைச் சிவகாமி அடைந்தபோது, வாசலில் பேரிகை முழக்கம் கேட்டது. வீட்டின் மூன்று கட்டுகளையும் அதிவேகமாய்த் தாண்டி வாசற்புறம் சென்றாள். அங்கே அவளுடைய தந்தை ஏற்கெனவே நின்று, குதிரைகளின் மீது ஆரோகணித்து வந்த சக்கரவர்த்தியையும் அவருடைய திருக் குமாரரையும் வரவேற்க ஆயத்தமாயிருப்பதைப் பார்த்தாள்.

குமார சக்கரவர்த்தியின் அறிவொளி வீசிய கண்கள் சிவகாமியின் ஆர்வம் நிறைந்த கண்களுடன் சங்கேதம் பேசியபோது, புத்த பிக்ஷுவையும் அவருடன் வந்த வாலிபனையும் வீட்டிற்குள்ளே காணவில்லையென்பது சிவகாமிக்கு நினைவு வந்தது!

மட்டும் மறுமொழி சொல்லவில்லை!'' என்றாள் சிவகாமி,

"என்ன, சிவகாமி, அது?"

"மதுரைக்கும் கரூருக்கும் திருமணத் தூதர்களை அனுப்புவதாக இருந்த விஷயந்தான்!"

நரசிம்மர் இலேசாகச் சிரித்துவிட்டு, "அது உண்மைதான். பிள்ளைக்குக் கலியாணம் செய்ய வேண்டுமென்று எந்தத் தாயாருக்குத்தான் எண்ண மில்லாமலிருக்கும்? என் தாயாருடைய ஏற்பாடுதான் அது! ஆனால், நான் சக்கரவர்த்தியிடம் என் மனோ நிலையைத் தெரியப்படுத்தச் சந்தர்ப்பத்தை எதிர் நோக்கிக் கொண்டிருந்தேன். அதற்குள் இந்த யுத்தம் வந்து அதற்கு அவசியம் இல்லாமல் செய்துவிட்டது.''

"பிரபு! எனக்கு என்னமோ மன நிம்மதி இல்லை. மூன்றரை வருஷத்துக்கு முன்பு இருந்ததுபோல் நாம் இருவரும் குழந்தைகளாகி விடக் கூடாதா என்று தோன்றுகிறது.''

"இல்லை, சிவகாமி! மறுபடியும் குழந்தைகளாக நான் ஒரு நாளும் சம்மதிக்க மாட்டேன். அதற்கு இரண்டு முக்கிய காரணங்கள் இருக்கின்றன. முதலாவது, தேவி சிவகாமியைப் பார்த்தபிறகு, குழந்தை சிவகாமியை நான் விரும்ப முடியாது. இரண்டாவது காரணம், சக்கரவர்த்தி இப்போதே நான் போர்க்களம் போவதற்கு ஆட்சேபிக்கிறார்; நான் குழந்தையா யிருந்தால் சம்மதிப்பாரா?"

"பிரபு! தாங்கள் கூடப் போர்க்களம் போவீர்களா? எப்போது?" என்று சிவகாமி கவலையுடன் கேட்டாள்.

"போவேன், சிவகாமி! அவசியம் போவேன்! என் தந்தையுடன் அதைப் பற்றித் தான் மூன்று நாளாக வாதம் செய்து கொண்டிருக்கிறேன். நூறு வருஷ காலமாக அன்னியர்கள் காலடி வைக்காத பல்லவ ராஜ்யத்தில் இன்று சளுக்கர்கள் படையெடுத்திருக்கிறார்கள். அவர்களை துவம்ஸம் செய்து புத்தி புகட்டாத வரையில்,......"

"பிரபு! அதற்குப் பல்லவ சைனியங்கள் இல்லையா? படைத்தலைவர்கள் இல்லையா? தாங்கள் ஏன் போக வேண்டும்?"

"பல்லவ சைனியங்கள் அன்னியர்களை எதிர்த்து வீரப் போர் புரியும் போது, நான் என்ன செய்யட்டும்? அரண்மனையில் உட்கார்ந்து ஐந்து வேளை அறுசுவை உண்டி அருந்தி அந்தப்புர மாதர்களுடன் சொக்கட்டான் ஆடிக் கொண்டிருக்கட்டுமா? அப்படி நான் இருந்தால், ஆயனர் மகளின் தெய்விகக் காதலுக்குப் பாத்திரன் ஆவேனா?"

அப்போது சிவகாமி கூறினாள்: "பிரபு! தாங்கள் போர்க்களம் போவதைத் தடுப்பவள் நான் அல்ல. தாராளமாய்ச் சென்று பகைவர்களை வென்று வாகைமாலை சூடி வாருங்கள். ஆனால்......"

"ஆனால், என்ன?"

"என்னுடைய கோரிக்கையைப் பரிகாசம் செய்யக் கூடாது."

"இல்லை, சிவகாமி! சொல்லு!"

"ஸ்ரீ சுப்பிரமணியர் வள்ளியம்மைக்குச் சத்தியம் செய்து கொடுத்தது போல், உங்கள் கையிலுள்ள வேலின் மேல் ஆணை வைத்துச் சொல்லுங்கள், போர்க்களத்திலும் என்னை மறப்பதில்லையென்று!"

நரசிம்மர் புன்முறுவல் செய்து, "இவ்வளவுதானே, சிவகாமி! 'என்னை மறந்து விடுங்கள்' என்று நீ ஆணையிடச் சொன்னால்தான் என்னால் முடியாது! மறக்காமலிருப்பதற்கு எத்தனை தடவை என்ன சத்தியம் வேணுமானாலும் செய்கிறேன். இதோ!..." என்று வேலைத் தூக்கிப் பிடித்தவர், சட்டென்று தயங்கி நின்றார்.

சிவகாமியின் முகம் சுருங்கியது. "பிரபு! ஏன் தயங்குகிறீர்கள்? அதற்குள்ளே மனம் மாறி விட்டதா?" என்றாள்.

"இல்லை, சிவகாமி, இல்லை! — இந்த வேல் என்னுடையதில்லையே, இன்னொருவருடைய வேலின் மேல் ஆணையிடலாமா என்று யோசிக்கிறேன்."

"என்ன? உங்களுடைய வேல் இல்லையா? பின், யாருடையது!"

"அரங்கேற்றத்தன்று மத யானையின்மேல் வேல் எறிந்து ஆயனரையும் உன்னையும் தப்புவித்தானே, அந்த

இப்படியெல்லாம் நாம் விளையாடுவதைப் பார்த்து நம்முடைய தந்தைமார்களும் சந்தோஷப் படுவார்கள். ஆஹா! அதையெல்லாம் நினைத்தால் ஒரு குதூகலமான கனவு மாதிரி இப்போது தோன்றுகிறது."

"பிரபு! நான் ஏதோ மாறிப்போனதாகச் சொன்னீர்கள். எந்த விதத்தில் மாறியிருக்கிறேன்?" என்று சிவகாமி கேட்டாள்.

"நல்லவேளை, ஞாபகப்படுத்தினாய். சொல்கிறேன், கேள். எனக்குப் பதினாறு பிராயம் பூர்த்தியானபோது, சக்கரவர்த்தி என்னைத் தேச யாத்திரைக்கு அழைத்துச் சென்றார். தெற்கே சித்தர் வாச மலையிலிருந்து வடக்கே நாகார்ஜுன மலை வரையில் நாங்கள் யாத்திரை செய்தோம். மேற்கே, காவேரி நதியின் ஜனன ஸ்தானம் வரையில் போயிருந்தோம். யாத்திரையை முடித்துக்கொண்டு நாங்கள் திரும்பி வருவதற்கு மூன்று வருஷம் ஆயிற்று......"

"அந்த மூன்று வருஷமும் எனக்கு மூன்று யுகமாக இருந்தது" என்றாள் சிவகாமி.

"மூன்று வருஷங் கழித்து நான் திரும்பி வந்து மறுபடியும் உன்னைப் பார்த்தபோது, உன்னிடம் காணப்பட்ட மாறுதல் என்னைத் திகைப்படையச் செய்தது. நீ பழைய சிவகாமியாகவே இல்லை. தேவ சபையிலிருந்து அரம்பையோ, ஊர்வசியோ வந்து ஆயனர் வீட்டில் வளர்வதாகவே தோன்றியது. உருவ மாறுதலைக் காட்டிலும் உன்னுடைய குணத்திலும் நடவடிக்கையிலும் காணப்பட்ட மாறுதல்தான் எனக்கு அதிக வியப்பை யளித்தது. என்னைக் கண்டதும் நீ முன்போல் ஆர்வத்துடன் ஓடி வந்து வரவேற்கவில்லை; கலகலப்பாகப் பேசவில்லை. தூண் மறைவில் மறைந்து கொண்டு நின்றாய். நான் உன்னைப் பார்க்கும்போது நீ வேறு பக்கம் திருப்பிக் கொண்டாய். நான் உன்னைப் பார்க்காத சமயங்களில் கடைக் கண்ணால் என்னைப் பார்த்துக் கொண்டிருந்தாய். தப்பித் தவறி நமது கண்கள் சந்தித்துவிட்டால் உடனே தலையைக் குனிந்து கொண்டாய். உன்னுடைய கலீரென்ற சிரிப்பு மறைந்துவிட்டது! உரத்துச் சிரிக்க வேண்டிய சமயங்களில் இலேசாகப் புன்னகை புரிந்தாய். சில சமயம் உன் கண்களில் கண்ணீர் ததும்பி நிற்பதைக் கண்டேன். ஒரு காரணமுமில்லாமல் நீ பெருமூச்சு விடுவதைக் கேட்டேன். இதெல்லாம் எனக்கு முதலில் வியப்பை யளித்தது. எல்லாவற்றையும்விட அதிக வியப்பை எனக்கு அளித்தது என்னவென்றால், என்னையறியாமல் நானே சில சமயம் பெருமூச்சு விடத் தொடங்கினேன்!......" என்று நரசிம்மர் சொன்னபோது, சிவகாமி கலீர் என்று சிரித்து விட்டாள்.

நரசிம்மர் மீண்டும் தொடர்ந்து கூறினார் :—

"நானும் பெருமூச்சு விட்டதோடு நிற்கவில்லை. என் உள்ளத்திலும் ஒரு மாறுதலைக் கண்டேன். இரவும் பகலும் சதா சர்வ காலமும் உன்னுடைய நினைவு என் இருதயத்தில் குடிகொண்டது. அந்த நினைவு இன்பத்தையும் வேதனையையும் ஏககாலத்தில் அளித்தது. எப்பேர்ப்பட்ட முக்கியமான காரியத்தில் ஈடுபட்ட போதிலும் உன்னை என்னால் மறக்க முடியவில்லை. இந்த நிலைமையில் இந்தத் தாமரைக் குளக்கரையில் ஒரு நாள் நாம் தனியாகச் சந்தித்தோம். சற்றுநேரம் என்ன பேசுவது என்று தெரியாமல் திண்டாடிக் கொண்டிருந்தோம். பிறகு, ஒருவாறு மனம் விட்டுப் பேசினோம். மூன்று வருஷம் உன்னை வந்து பார்க்காமல் இருந்ததற்காக நீ என்னைச் சண்டை பிடித்தாய். கடைசியில், உன்னை மறப்பதில்லை என்று கை யடித்துச் சத்தியம் செய்து கொடுக்கச் சொன்னாய். எனக்குச் சிரிப்பு வந்தது. உன்னை ஒரு கணமும் மறக்க முடியாமல் நான் திண்டாடிய திண்டாட்டம் எனக்கல்லவா தெரியும்? ஆனாலும், உன்னுடைய மனத் திருப்திக்காகச் சத்தியம் செய்து கொடுத்தேன். மறுபடியும் இன்றுதான் நாம் இங்கே சந்திக்கிறோம். ஒரு வேளை நீ இங்கு இருக்க மாட்டாயா என்ற ஆசையினால் வந்தேன். பார்த்தால், நீ இங்கே இருக்கிறாய்! நம்முடைய உள்ளங்கள் தான் எப்படி ஒத்திருக்கின்றன!" என்று நரசிம்மர் நிறுத்தினார்.

"இவ்வளவெல்லாம் சொன்னீர்கள். நான் முதலில் கேட்ட கேள்விக்கு

இன்னொரு பக்கத்தில் கொட்டம் அடிப்போம்! சில சமயம் நான் உன்னை எனக்கும் பரத நாட்டியம் சொல்லிக் கொடுக்கும்படி கேட்பேன். நீ சொல்லிக்கொடுக்க முயல்வாய்; எனக்கு நன்றாய் வராது. என்னுடைய அசட்டுத்தனத்தைக் கண்டு நீ கல கலவென்று சிரிப்பாய். உன்னுடைய முல்லைப் பல் வரிசையைப் பார்த்து நான் மதி மயங்கி நிற்பேன். இன்னும் சில சமயம் நாம் இருவரும் ஓடிப் பிடித்து விளையாடுவோம். நீ சில சமயம் ஆயனர் அமைத்த சிலைகளுக்குப் பின்னால் ஒளிந்து கொள்வாய்; இன்னும் சில சமயங்களில் கற்சிலைகளுக்கு மத்தியில் நீயும் ஒரு சிலையைப்போல் அசையாமல் நாட்டியத் தோற்றத்துடன் நிற்பாய். நானும் வேண்டுமென்றே உன்னைச் சிலையாகப் பாவித்துக்கொண்டு மேலே போவேன். உன்னுடைய சிரிப்பின் ஒலியைக் கேட்ட பிறகு திரும்பிப் பார்த்து உன்னைப் பிடித்துக் கொள்வேன். 'அகப்பட்டுக் கொண்டாயா, சிவகாமி தேவி?' என்று பாடுவேன்.



போல் இப்போது சிவகாமி நரசிம்மரை ஏறிட்டுப் பார்த்தாள். "அது என்ன வியப்பான விஷயம்?" என்னும் கேள்வியை அவளுடைய கண்களும் புருவங்களும் கேட்டன.

நரசிம்மர் சிவகாமியின் முகத்தைக் கண்களால் விழுங்கி விடுபவர்போல் பார்த்துக்கொண்டு கூறினார்:

"மூன்று வருஷ காலத்திற்குள் உன்னிடம் ஏற்பட்டிருக்கும் மாறுதலைத்தான் சொல்கிறேன், வியப்பான விஷயம் என்று. உனக்கு ஞாபகம் இருக்கிறதா, சிவகாமி! சக்கரவர்த்தியும் நானும் அந்த நாளில் உங்கள் வீட்டுக்கு வருவோம். என்னைக் கண்டதும் நீ கொஞ்சமும் கூச்சமோ, தயக்கமோ இல்லாமல் ஓடி வருவாய். சக்கரவர்த்தியின் குமாரன் என்ற பயம் மரியாதை ஒன்றுமில்லாமல் என் கையைப் பிடித்துக் கர கரவென்று இழுத்துக் கொண்டு போவாய். நம் இருவருடைய தந்தைகளும் ஒரு பக்கம் பேசிக் கொண்டிருக்கும்போது நாம்



என்ன தீங்கைச் செய்தார்கள்? சிவகாமி! நமது திருநாவுக்கரசர் பெருமானின் தேனினும் இனிய திருப்பாடல்களை நீ கேட்டிருக்கிறாயல்லவா? 'குனித்த புருவமும் குவளைச் செவ்வாயும்' என்ற தெய்விகப் பாடலுக்கு அபிநயங்கூடப் பிடித்தாயே? அப்படியிருக்க, புத்த பிக்ஷுணியாக வேண்டுமென்ற எண்ணம் உன் மனதில் எப்படி உதித்தது?" என்று நரசிம்மர் சரமாரியாய்ப் பொழிந்தார்.

"எனக்குச் சிவன் பேரிலும் திருமாலின் பேரிலும் வெறுப்பு ஒன்றுமில்லை. கல்யாணத்தின் பேரிலேதான் வெறுப்பு. புத்த பிக்ஷுணியாகி நான் தேச யாத்திரை செய்யப்போகிறேன்" என்று சிவகாமி தலை குனிந்த வண்ணம் கூறினாள்.

"சிவகாமி! உன்னை எந்தப் புத்தனாவது பிக்ஷுணி யாக்கினானானால், இந்த நாட்டில் ஜைனர்களுக்கு வந்த கேடு புத்தர்களுக்கும் வரும். அந்த மாதிரி எண்ணமே உனக்கு வரக்கூடாது. மகா மேதாவியான உன் தந்தையின் பேச்சை நீ தட்டலாமா! அவருடைய விருப்பத்தின்படி அவருடைய சீடர்களில் மிகவும் கெட்டிக்காரன் எவனோ, அவனை நீ மணம் புரிந்து கொள்ளத்தான் வேண்டும்" என்று நரசிம்மர் கடுமையான குரலில் சொன்னார்.

சிவகாமியோ உண்மையிலேயே சோகம் நிறைந்த குரலில், "என்னை எந்த அசட்டுப் பிள்ளையின் கழுத்திலாவது கட்டி விடுவதில் உங்களுக்கு என்ன அவ்வளவு சிரத்தை? அரண்மனையில் பிறந்து வளர்ந்த அரசிளங் குமரியை நீங்கள் மணந்து கொள்வதை நான் குறுக்கே நின்று தடுக்கவில்லையே?" என்றாள். அவளுடைய கண்களில் ஜலம் தளும்பி நின்றது.

நரசிம்மர் பொய்யான கோபக் குரலில், "ஜாக்கிரதை, சிவகாமி! நிதானித்துப் பேசு! அசட்டுப் பிள்ளை என்று யாரைச் சொன்னாய்? உன் தந்தையின் சீடர்களுள் ரொம்ப கெட்டிக்காரன் யார் என்பது உனக்குத் தெரியாதா? ஆயனர் எத்தனையோ தடவை, 'குமார சக்கரவர்த்திக்குச் சிற்பக் கலை வருவது போல் வேறு யாருக்கும் வராது' என்று சொல்லியதில்லையா? அப்படியிருக்க, ஆயனரின் சீடர்களில் மிகவும் கெட்டிக்காரனுக்கு உன்னை மணம் செய்து கொடுப்பதாயிருந்தால் எனக்குத்தானே கொடுக்க வேண்டும்? அதற்காக உன் தந்தைக்கு நான் நன்றி செலுத்த வேண்டாமா?" என்று நரசிம்மர் கூறியபோது அவருடைய முகத்தில் குறும்பும் குதூகலமும் தாண்டவமாடின.

ஆனால் சிவகாமியோ சட்டென்று பலகையிலிருந்து எழுந்து குமார சக்கரவர்த்தியின் பாதங்களில் நமஸ்கரித்தாள். "பிரபு! இந்த ஏழைப் பெண்ணுக்கு ஏன் வீண் ஆசை காட்டுகிறீர்கள்......?" என்று கூறி மேலே பேச முடியாமல் விம்மி விம்மி அழத் தொடங்கினாள்.

நரசிம்மர் அவளுடைய கரங்களைப் பிடித்துத் தூக்கி மறுபடியும் பலகையில் தம் அருகில் உட்கார வைத்துக் கொண்டு, "சிவகாமி! நான் வீண் ஆசை காட்டுகிறதாக ஏன் எண்ணுகிறாய்? என்னை நீ இன்னும் தெரிந்து கொள்ளவில்லையா! இப்படி நீ கண்ணீர் விடுவதைப் பார்க்கும்போது..." என்று கூறுவதற்குள், சிவகாமி, உணர்ச்சி தொண்டையை அடைக்கத் தழதழத்த குரலில், "பிரபு! இது ஆனந்தக் கண்ணீர்! துயரக் கண்ணீர் அல்ல!" என்றாள்.

பதினோராம் அத்தியாயம்

வேலின் மேல் ஆணை

நரசிம்மர் தமது அங்க வஸ்திரத்தின் தலைப்பினால் சிவகாமியின் கண்களில் பெருகிய நீரைத் துடைத்த வண்ணம், "சிவகாமி! நினைக்க நினைக்க ஒரு விஷயம் எனக்கு வியப்பை யளிக்கிறது!" என்று கூறினார்.

சற்று முன்னால் சிவகாமியின் முகத்தை ரதி எதிரிட்டுப் பார்த்தது

விருந்து பல்லவ சாம்ராஜ்யத்தில் யுத்தம் நேரவில்லை. பல்லவ சேனு வீரர்களின் கைகளில் வேல்களும் வாள்களும் துருப்பிடித்து வந்தன. இப்போது அவற்றுக்கெல்லாம் வேலை வந்திருக்கிறது. சிவகாமி! போர்க் களத்திலே ஆயிரக்கணக்கில் மின்னிப் பாயப்போகிற வேல்களையும், வாள் களையும் கண்டு பயப்படுகிறவன் நான் அல்ல. ஆனல், உன்னுடைய கரிய விழிகளிலிருந்து கிளம்பிப் பாயும் வாள்களையும் வேல்களையும் கண்டு தான் அஞ்சுகிறேன்!"

சிவகாமி தன்னை மீறி வந்த புன் முறுவலை அடக்கிக்கொள்ள முடியா தவளாய்,

"புருஷர்களே இப்படித்தான் போலிருக்கிறது. சாதுர்யமாயும் சக்கரவட்டமாயும் பேசி உண்மையை மறைக்கப் பார்ப்பார்கள்" என்று இலேசாக முணுமுணுத்தாள். ஆனு லும் அந்த வார்த்தைகள் நரசிம்மரின் காதில் விழாமற் போகவில்லை.

"பழிமேல் பழியாகச் சுமத்திக் கொண்டிருக்கிருயே? எந்த உண் மையை நான் மறைக்கப் பார்த்தேன்?" என்று மாமல்லர் கேட்டார்.

"பின்னே, நீங்கள் யுத்தத்துக்குப் பயப்படுகிறவர் என்று நான் சொன் னேனு? நீங்கள் வீராதி வீரர், சிம்ம விஷ்ணு மகாராஜாவின் பேரர், மகேந்திர சக்கரவர்த்தியின் குமாரர்— என்பதெல்லாம் எனக்குத் தெரியாதா? இந்த யுத்தம் வந்ததினுல் திருமணம் தடைப்பட்டு விட்டதே, அதைப் பற்றி உங்களுக்குக் கவலை என்று தானே சொன்னேன்?" — இவ்விதம் சிவகாமி கூறியபோது, அவளுடைய முகத்தில் நாணத்துடன் கோபம் போராடியது.

அதைக் கேட்ட நரசிம்மர் வியப் புடன், "சிவகாமி! என்ன சொல்லு கிருய்? திருமணம் தடைப்பட்டு விட்டதா? யாருடைய திருமணம்?" என்று கேட்டார்.

"ஓஹோ! உங்களுக்குத் தெரியவே தெரியாதுபோ லிருக்கிறது. நான் சொல்லட்டுமா? காஞ்சிமா நகரத்தில் மகாராஜாதிராஜ திரிபுவன சக்கர வர்த்தி மகேந்திர வர்ம பல்லவர் இருக் கிருரோ, இல்லையோ? அந்தச் சக்கர வர்த்திக்குத் தேசமெல்லாம் புகழ் பெற்று மாமல்லர் என்று பட்டம் பெற்ற ஒரு திருக் குமாரர் உண்டு. அப்பேர்ப்பட்ட குமார சக்கரவர்த் திக்குத் திருமணம் பேசி வருவதற் காக மதுரைக்கும், கரூருக்கும், இன் னும் வட தேசத்துக்கும் தூதர்களை அனுப்ப ஏற்பாடாகி யிருந்ததாம். அப்பேர்ப்பட்ட சமயத்தில் யாரோ ஒரு பொல்லாத அரசன் பல்லவ ராஜ்யத்துக்குள் படை யெடுத்து வரவே, கல்யாணத்தைத் தள்ளிப் போட வேண்டியதாகி விட்டது. இதெல்லாம் தங்களுக்குத் தெரியவே தெரியாதல்லவா?" என்ருள் சிவகாமி.

நரசிம்மர் இடி இடி யென்று சிரித்து விட்டு, "இதற்குத்தான இவ்வளவு பாடுபடுத்தினுய்? நான் பயந்துபோய் விட்டேன், உனக்குத்தான் ஒரு வேளை ஆயனர் திருமணம் நிச்சயம் செய்து விட்டாரோ என்று! அப்படி ஒன்றும் இல்லையே?" என்ருர்.

சிவகாமி கண்களில் கபடக்குறும்பு தோன்ற அவரைப் பார்த்துக் கொண்டு, "ஏன் இல்லை? என் தந்தை கூட அடிக்கடி என் கல்யாணத்தைப் பற்றிப் பேசிக் கொண்டுதானிருக் கிருர். அவரிடம் சிற்ப வேலை கற்றுக் கொள்ளும் கெட்டிக்கார சிடப்பிள்ளை ஒருவனைப் பார்த்து என்னை மணம் செய்து கொடுக்கப் போகிருராம்" என்ருள்.

"ஆஹா! ரொம்ப சந்தோஷம். உன் தந்தை நிஜமாக அப்படிச் சொன் ஞரா! அவரை உடனே பார்த்து என்னுடைய நன்றியை அவருக்குத் தெரிவித்துக் கொள்ள வேண்டும்" என்று நரசிம்மர் கூறிய மறுமொழி சிவகாமியைத் திடுக்கிடச் செய்தது. அவளுடைய கண்கள் கலங்கின. தழு தழுத்த குரலில், "ஆனல், நான் அதற்குச் சம்மதிக்கவில்லை. 'எனக்குக் கல்யாணம் வேண்டாம், நான் புத்த பிக்ஷுணி ஆகப் போகிறேன்' என்று அப்பாவிடம் சொல்லி விட்டேன்" என்ருள்.

"என்ன? நீயா புத்த பிக்ஷுணி ஆகப் போகிருய்? எதற்காக? ஆயனர் மகளா இப்படிப் பேசுகிறது? சிவபெருமானும், திருமாலும் உனக்கு

நேரில் வந்து உட்கார்ந்தால், ஒரு வேளை உன் ஆட்டத்துக்குப் பங்கம் விளையுமோ என்னமோ என்று பயந்தேன். நான் பயந்தது நியாயமில்லையா?'' என்று கேட்டபோது, சிவகாமியின் முகத்தில் இதுவரை காணப்படாத மகிழ்ச்சியும் மலர்ச்சியும் தோன்றின.

ஆனால், நரசிம்மரை ஆர்வத்துடன் நோக்கி "இதை ஏன் முன்னமே நீங்கள் சொல்லவில்லை?'' என்று அவள் கேட்டாள்.

"சொல்வதற்கு நீ இடங் கொடுத்தால் தானே? இன்னும் எவ்வளவோ சொல்ல வேண்டியிருக்கிறது. வா! உன்னுடைய சிம்மாசனத்தில் உட்கார்ந்து பேசலாம்'' என்று கூறி, நரசிம்மர் குளக்கரையில் மரத்தடியில் அமைத்திருந்த பலகையைப் பார்த்தவாறு சிவகாமியின் கரத்தைப் பிடித்து அழைத்துப்போக யத்தனித்தார். சிவகாமியோ, அவர் பிடித்த கையைச் சட்டென்று இழுத்துக்கொண்டு, மானைப்போல் துள்ளிக் கரைமீது ஏறினாள்.

நரசிம்மர் அவளைப் பின்தொடர்ந்து சென்றார். அவர்கள் இருவரும் போய் மரத்தடியில் போட்டிருந்த பலகையில் உட்கார்ந்ததை ரதி தலையை நிமிர்த்திப் பார்த்துக்கொண்டிருந்தது. இனி நம்முடைய தூது இவர்களுக்குத் தேவையில்லை என்பதைத் தெரிந்து கொண்டதுபோல், அது குளத்தோரமாகக் கருகருவென்று வளர்ந்திருந்த பசும்புல்லை மேயச் சென்றது.

பதினாறாம் அத்தியாயம்

தடைப்பட்ட திருமணம்

பலகையில் உட்கார்ந்த பிறகும் சிவகாமி வேறு பக்கம் முகத்தைத் திருப்பிக்கொண்டிருப்பதைப் பார்த்த நரசிம்மர், "இன்னும் என்ன கோபம், சிவகாமி?'' என்று அவளுடைய கன்னங்களைத் தொட்டுத் தம் பக்கமாக முகத்தைத் திருப்ப முயன்றார்.

சிவகாமி அவருடைய கையைப் பலமாகப் பிடித்துத் தள்ளினாள்.

"ஆகா! மாந்தளிர்போல் மிருதுவான உன் கையிலேதான் எவ்வளவு பலம் இருக்கிறது!'' என்றார் நரசிம்மர். பாண்டிய நாட்டிலிருந்து சளுக்க தேசம் வரையில் உள்ள மல்லர்களையெல்லாம் வென்று 'மாமல்லன்' என்று பட்டம் பெற்ற தம்முடைய கரத்தை ஒரு மெல்லியலாள் இவ்வளவு சுலபமாகத் தள்ள முடிந்ததை நினைத்து அவர் புன்னகை புரிந்தார்.

"இப்படி நீ பிடிவாதம் பிடிக்கும் பட்சத்தில் என்னிடம் உனக்குப் பிரியம் இல்லை என்றுதான் எண்ணிக்கொள்வேன்'' என்றார்.

சிவகாமி உடனே திரும்பி, நரசிம்மரின் முகத்தை ஏறிட்டுப் பார்த்து, "உங்களுக்கு மட்டும் என்னிடம் பிரியம் இருக்கிறதா? இருந்தால், இந்த மூன்று நாளாக என்னுடைய ஞாபகம் இல்லாமற் போனதென்ன?'' என்று கேட்டாள்.

"அதுதானே கோபம், சிவகாமி! இந்த மூன்று தினங்களாக நானும் உன்னைப் பார்க்க வரவேணுமென்று துடித்துக் கொண்டுதானிருந்தேன். ஆனால், முக்கியமான வேலைகள் குறுக்கிட்டன. அன்றைக்கு, உன்னுடைய அரங்கேற்றத்தை நடுவில் நிறுத்தி முடிக்கும்படி நேர்ந்தது ஏன் என்று உனக்குத் தெரியாதா? பல்லவ சாம்ராஜ்யத்தில் நூறு வருஷமாக இல்லாத சம்பவம் இப்போது நேர்ந்திருக்கிறது. பெரிய யுத்தம் வந்திருக்கிறது ...''

இவ்விதம் நரசிம்மர் சொல்லி வரும்போது சிவகாமி குறுக்கிட்டு, "ஆமாம்; நானும் கேள்விப்பட்டேன். யுத்தம் வந்துவிட்டதே என்று மூன்று நாளாக நினைத்து நினைத்துக் கவலைப்பட்டுக் கொண்டிருந்தீர்களாக்கும்'' என்றாள்.

"கவலையா? என்ன வார்த்தை சொன்னாய், சிவகாமி! பல்லவ குலத்தில் பிறந்தவர்கள் யுத்தம் வந்துவிட்டதே என்று கவலைப்படமாட்டார்கள்; குதூகலப்படுவார்கள். என் பாட்டனார் சிம்ம விஷ்ணுமகாராஜாவின் காலத்தி

உணர்ந்து கொண்டேன், ரதி! இதை அவருக்குத் தெரியப்படுத்து!"

குமார சக்கரவர்த்தி குரலில் கோபம் தொனிக்கக் கூறினர்:—"ரதி! உன் எஜமானிக்கு ஒரு விஷயத்தை ஞாபகப் படுத்து. பரத சாஸ்திர பண்டிதையான சிவகாமி தேவி இப்போது ஆடரங்கத்தில் நிற்கவில்லை; அபிநயம் பிடிக்கவில்லை. நிர்த்தம், நிருத்யம், ஹஸ்தம், அபிநயம் ஆகியவைகளைக் கொஞ்சம் ஒதுக்கி வைத்துவிட்டு என்னுடன் கொஞ்சம் சுபாவிகமாகப் பேசச் சொல்லு!"

இயற்கையில் செவ்வரி யோடிய சிவகாமியின் கண்கள் இப்போது கோபத்தினல் கோவைப் பழம்போல் சிவந்தன.

"ஆமாம், ரதி, ஆமாம்! நான் நடன ரங்கத்தில் நடிக்கும் நாடகக்காரிதான். கூத்து மேடையில் ஆடும் கூத்தாடிச்சிதான். காஞ்சி சக்கரவர்த்தியின் திருக்குமாரர் எங்கே? ஆயனச் சிற்பியின் மகள் எங்கே? மாமல்லரின் அருளைப் பெறுவதற்கு அரண்மனைகளிலும் அந்தப்புரங்களிலும் வளரும் எத்தனையோ இராஜகுமாரிகள் தவங் கிடக்கிறார்கள்! அரங்க மேடையில் ஏறி ஆடும் இந்த ஏழைப் பெண்ணின் ஞாபகம் அவருக்கு எப்படி இருக்கும்?" என்று சிவகாமி சொன்ன போது, அவளுடைய குரல் தழுதழுத்தது; கண்ணில் ஜலம் துளித்தது.

நரசிம்ம வர்மரும் மனங்கனிந்தவராய் அன்பு ததும்பிய குரலில், "சிவகாமி! ஏன் இப்படியெல்லாம் பேசுகிறாய்? இந்தப் பரந்த பல்லவ சாம்ராஜ்யத்துக்கு நான் தலைவனாகும் போது, அரங்க மேடையில் சதங்கை ஒலிக்க ஆடும் உன் அழகிய பாதங்களுக்கு இந்த சாம்ராஜ்யத்தையே அர்ப்பணம் செய்வேன். என் உள்ளம் உனக்குத் தெரியாதா?" என்றார்.

இதனாலும் சிவகாமியின் மனம் மாற வில்லை. மீண்டும் அவள் மான்குட்டியையே பார்த்தவளாய், "ரதி! கதைகளிலும் காவியங்களிலும் புருஷர்களுடைய நய வஞ்சகத்தைப் பற்றி எவ்வளவோ கேட்டறிந்திருக்கிறேன். ஆனால் அவர்களில் யாரும் காஞ்சி குமார சக்ரவர்த்திக்கு இணையாக மாட்டார்கள் போலிருக்கிறது!" என்றாள்.

நரசிம்மவர்மருக்கு இப்போது உண்மையாகவே கோபம் வந்ததென்று அவருடைய புருவங்களின் நெரிப்பிலிருந்து தெரிந்தது.


"சிவகாமி! ஏனோ இன்றைக்கு நீ இவ்விதம் மாறியிருக்கிறாய்! எவ்வளவோ ஆசையுடன் நான் உன்னைத் தேடி வந்தேன். எவ்வளவோ விஷயங்கள் பேச எண்ணியிருந்தேன். நான் வந்ததே உனக்குப் பிடிக்கவில்லை யென்று தோன்றுகிறது. இதோ போகிறேன்!" என்று ஓர் அடி எடுத்து வைத்தார்.

அப்போது சிவகாமி விம்மிய குரலில் கூறினாள்:—"ரதி! இந்தப் புருஷர்களே இப்படித்தான். செய்கிறதையும் செய்துவிட்டுப் பழியைப் பெண்கள் தலையில் போட்டு விடுவார்கள். அவர் போகிறதாயிருந்தால் போகட்டும். ஆனால் குற்றத்தை என் பேரில் சுமத்திவிட்டுப் போகவேண்டாமென்று சொல்லு!"

நரசிம்மர் மேலே அடி எடுத்து வைக்காமல் நின்று "நான் என்ன தான் செய்துவிட்டேன்? என்பேரில் என்ன குற்றம்? அதுதானே தெரியவில்லை?" என்றார்.

சிவகாமி பெண் சிங்கத்தைப் போல் கம்பீரமாக அவரைத் திரும்பிப் பார்த்து, "தெரியவில்லையா? நிஜமாகத் தெரியவில்லையா? என்னுடைய நடனக் கலையைப்பற்றி எப்படியெல்லாம் பாராட்டிப் பேசினீர்கள்? எவ்வளவெல்லாம் முகஸ்துதி செய்தீர்கள்? அப்படியெல்லாம் பேசிவிட்டு, அரங்கேற்றத்துக்கு ஏன் வராமல் இருந்தீர்கள்?" என்று கண்களில் கனல் பறக்கக் கேட்டாள்.

நரசிம்மர் கலகலவென்று சிரித்து, "இதை முன்னமேயே கேட்டிருக்கக் கூடாதா? நான் அரங்கேற்றத்துக்கு வரவில்லையென்று உனக்கு யார் சொன்னது? மேல் உப்பரிகையில் என் தாய்மார்களோடு உட்கார்ந்து பார்த்துக்கொண்டு தானிருந்தேன். அவர்களுக்குப் பரத சாஸ்திர நுட்பங்களைப் பற்றி அவ்வப்போது எடுத்துச் சொல்லிக்கொண்டிருந்தேன். நான் சபையில்



சிவகாமியின் சபதம்

பதினைந்தாம் அத்தியாயம்

ரதியின் தூது

குதிரை வந்த சத்தம் சிவகாமியின் செவியில் விழுந்தது. குதிரை நின்றதையும் அதன்மேல் வந்த வீரன் இறங்கித் தன்னை நோக்கி நடந்து வருவதையும் அவள் உய்த்துணர்ந்தாள். வருகிறது இன்னார்தான் என்பதை அவளுடைய நெஞ்சு பட்பட் என்று அடித்துக் கொண்டு அவளுக்கு உணர்த்தியது. இருந்தாலும், திரும்பிப் பார்த்துச் சந்தேகம் தீர வேண்டுமென்ற ஆவல் அளவில்லாமல் எழுந்தது. அந்த ஆவலைப் பலவந்தமாய் அடக்கிக் கொண்டு, சிலையைப்போல் அசையாமல் நின்றாள் சிவகாமி.

குமார சக்கரவர்த்தி, மாமல்ல நரசிம்மர், கையில் பிடித்த வேலுடன் வந்து சிவகாமியின் அருகில் குளக்கரைப் படியில் நின்றார். குளத்தின் தெளிந்த நீரில் சிவகாமியின் உருவத்துக்குப் பக்கத்தில் நரசிம்ம வர்மரின் உருவமும் புலப்பட்டது.

அப்போதும் சிவகாமி அவரைத் திரும்பிப் பார்க்கவில்லை.

வீர சௌந்தரியம் குடி கொண்டு ஞான தேஜஸுடன் விளங்கிய நரசிம்மரின் நவ யௌவன முகத்தில் இலேசாகப் புன்னகை அரும்பியது. அவரும் சிவகாமியை நேராகப் பார்க்காமல், தண்ணீரில் பிரதிபலித்த அவளுடைய முழுமதி முகத்தை உற்று நோக்கினார். சிவகாமியோ சட்டென்று தன் முகத்தைத் திருப்பிக் கொண்டு அவளுக்கு இன்னொரு பக்கத்தில் நின்ற மான் குட்டியைப் பார்த்து, "ரதி! இவர் யார்? எதற்காக இங்கு வந்தார் என்று கேள்!" என்றாள்.

இதைக் கேட்ட நரசிம்மரின் முகத்தில் புன்னகை மறைந்தது; புருவங்கள் நெரிந்தன. அவரும் ரதியைப் பார்த்து, "ரதி! இது நான் எதிர்பார்த்ததுதான்! உன் எஜமானி பரத கண்டத்திலேயே இணையற்ற பரத கலா ராணியாகி விட்டாள் அல்லவா? பழைய சிநேகிதத்தையெல்லாம் அவளால் நினைவு வைத்திருக்க முடியுமா? 'இவர் யார்?' என்று கேட்கத்தான் தோன்றும். இது ஒன்றும் எனக்கு ஆச்சரியம் இல்லை, ரதி!" என்றார்.

சிவகாமி ஆத்திரம் நிறைந்த குரலில் கூறினாள்:—"ரதி! ஆச்சரியத்தையே அறியாதவரான சக்கரவர்த்தியின் திருக்குமாரருக்கு என்னுடைய ஆயிரங்கோடி நமஸ்காரத்தைச் சொல்லிவிட்டு இதையும் சொல்லு: அவரோ பூமண்டலாதிபதியின் புதல்வர்; தேச தேசங்களின் ராஜ ராஜாக்கள் எல்லாம் தமது திருப் பாதங்களில் விழுந்து வணங்கப்பெற்ற பிரபு; அப்பேர்ப்பட்டவருக்கும் இந்த ஏழைச் சிற்பியின் மகளுக்கும் சிநேகம் என்பது எப்படிச் சாத்தியம்? அந்த எட்டாத பழத்துக்கு ஆசைப்பட்டது என்னுடைய அறிவீனந்தான் என்பதை

"கல்கி"


யுத்த டீ
ஒவ்வொரு போர் முனையிலிருந்தும்—எந்தெந்த இடத்தில மனுஷ்யனின் தைரியம், பொறுமை இவைகளின் விசேஷத்தை அவசியமாகக்கோருகிறதோ—அவ்விடமிருந்தெல்லாம் ஐக்கிய நாடுகளின் போர் வீரர்களுக்கு டீ அளிக்கும் விசேஷ குணங் களைப்பற்றிய செய்திகள் வருகின்றன. யுத்தத்திலும் சரி, சமாதானகாலங்களிலும் சரி, டீ கோற்ற கெடுதல் இல்லாத சௌகரியமளிக்கும் பானம் என்பதை நிரூபிக்கிறது.
கடினமான காலங்களில்
இந்தியன் டீ அருந்துங்கள்
இந்தியன் டீ மார்க்கெட் எக்ஸ்பான்ஷன் போர்டாரால் வெளியிடப்பட்டது IK 222

சொல்லுவதை ஒப்புக்கொண்டால் நான் எல்லாக் காரியங்களிலும் சுதந்திரத்தை இழந்து வாழ்க்கை நடத்த வேண்டியவனாவேன். இது எனக்குப் பிடிக்கவில்லை" என்று நான்காவது மகனும் சொல்லிவிட்டான்.

புதல்வர் நால்வராலும் நிராகரிக்கப்பட்ட யயாதி துக்கத்தில் மூழ்கினான். தன் சொல்லை எப்போதும் தவறாத கடைசிக் குமாரனைப் பார்த்து, "நீ தான் என்னைக் காப்பாற்ற வேண்டும். இந்த மூப்பும் கோரமான தோல் மடிப்புகளும் தள்ளாமையும் நரையும் சுக்கிராசாரியருடைய சாபத்தினால் பெற்றேன். இந்தத் துன்பத்தை நீ என்னிடமிருந்து பெற்றுக்கொண்டால் நான் சில காலம் போகங்களை அனுபவித்துவிட்டுப் பிறகு உன் இளமையை உனக்குத் திருப்பிக் கொடுத்துவிட்டு மூப்பையும் துக்கத்தையும் வாங்கிக் கொள்வேன். உன் அண்ணன்மார்களைப் போல் நீயும் மறுத்து விட வேண்டாம்!" என்று இறைஞ்சினான்.

கடைசி ராஜ குமாரனான பூரு என்பவன் அன்பு மேலிட்டு, "அப்பனே! உன் கட்டளையின்படி நான் சந்தோஷமாகச் செய்கிறேன். மூப்பையும் ராஜ்ய பாரத்தையும் எடுத்துக் கொள்கிறேன்" என்று சொன்னான்.

யயாதி அவனைக் கட்டி அணைத்துக் கொண்டான். உடனே தன் குமாரனுடைய இளமையை யயாதி அடைந்தான். மூப்பைப் பெற்றுக்கொண்டு கடைசி மகன் ராஜ்யபாலனம் செய்து பெரும் கீர்த்தி பெற்றான்.

யயாதி தன் இரண்டு பத்தினிகளுடன் நீண்டகாலம் காம சுகம் அனுபவித்தான். பிறகு குபேரனுடைய உத்யான வனத்தில் ஒரு அப்ஸரஸுடன் அநேக ஆண்டுகள் ரமித்தான்.

இவ்வாறு பல வருஷங்கள் கடந்தன. ஆயினும் யயாதி திருப்தி அடையவில்லை! பிறகு மகனிடம் திரும்பிவந்து அவனுக்கு யயாதி சொன்னதாவது:

"என் பிரியமுள்ள மகனே! காமத் தீயானது விரும்பினவற்றை அனுபவிப்பதனால் ஒரு பொழுதும் ஆறாது. நெய்யினால் அக்கினி ஆறாமல் மேலும் மேலும் ஜொலிப்பது போல் விஷய அனுபவத்தினால் ஆசைகள் விருத்தி ஆகுமே தவிரத் தணிவது கிடையாது. நெல்லும் பொன்னும் பசுவும் பெண்களும் மனிதன் ஆசையை ஒருநாளும் தீர்க்க முடியாது. எந்தப் பிராணிக்கும் தீங்கு செய்யாத மனநிலையை ஒருவன் அடைந்தால் அவன் சாந்தி அடைகிறான். பிற ஜீவன்களைக் கண்டு முற்றிலும் பயம் அற்றால், அவனிடத்திலும் மற்றப் பிராணிகளுக்குப் பயம் இல்லாமலிருக்கும். விருப்பும் வெறுப்பும் இல்லாத சாந்த நிலையை அடைய வேண்டும். அதுவே பிரம்ம நிலை. உன் இளமையை நீ பெற்றுக் கொண்டு ராஜ்யத்தைக் கீர்த்தியுடன் பரிபாலிப்பாயாக."



... தன் குமாரனுடைய இளமையை யயாதி அடைந்தான் ...

இப்படிச் சொல்லி யயாதி தன் மூப்பைத் திரும்பப் பெற்றுக் கொண்டான். இளமையை மறுபடி அடைந்த பூருவை ராஜ்ய பரிபாலனம் செய்ய அமைத்துவிட்டு யயாதி வனம் சென்றான். அங்கே பல்லாண்டுகள் தவம் செய்து சுவர்க்கம் சென்றான்.

வியாசர் விருந்து

சக்கரவர்த்தி - ராஜகோபாலாச்சாரியார்

யயாதி

பாண்டவர்களின் முன்னோர்களில் ஒருவன் யயாதி சக்கரவர்த்தி. தோல்வி என்பதை அறியாத மிக்க பராக்கிரமசாலி. எப்போதும் நியமம் காத்துப் பிதிருக்களையும் தேவர்களையும் மிகுந்த பக்தியுடன் ஆராதனம் செய்து வந்தவன். எல்லா ஜனங்களுக்கும் நன்மை செய்து மிக்க கீர்த்தி பெற்றவன்.

தருமம் தவறாமல் இவ்விதமாகப் பிரஜைகளைப் பரிபாலித்து வந்த யயாதி தன் மனைவி தேவயானிக்கு ஒரு தவறு செய்து அதன் பயனாக மாமனார் சுக்கிராசாரியர் இட்ட சாபத்தினால் கிழவர் என்று மூப்பை அடைந்தான். "ரூபத்தை அழிப்பதும் துன்பத்தைத் தருவதுமாகிய மூப்பை அடைந்தான்" என்கிறார் பாரதம் பாடிய கவி. விருத்தாப்பியம் அடைந்த அனைவரும் அறிந்த விஷயம் தானே! அதிலும் நடு யௌவனத்தி லிருக்கும் ஒருவன் கிழவர் என்று மூப்பை அடைந்துவிட்டால் சொல்ல வேண்டுமா?

இவ்வாறு கிழவர் என்று எதிர்பாராமல் கிழத் தனத்தை அடைந்த யயாதிக்குக் காம சுகத்தில் ஆசை தீர்ந்திருக்கவில்லை. அவனுக்கு ஐந்து அழகிய குமாரர்கள் இருந்தனர். அவர்கள் எல்லாரும் சாஸ்திரிய வித்தைகளில் பயிற்சி பெற்று நல்ல குணங்களெல்லாம் நிரம்பினவர்கள். அவர்களை அழைத்து யயாதி, "உங்கள் பாட்டனார் சுக்கிராசாரியருடைய சாபத்தினால் இந்த மூப்பை நான் எதிர்பாராத வண்ணம் அடைந்துவிட்டேன். புத்திரர்களே! நான் நியமங்களிலேயே என் காலமெல்லாம் கழித்துவிட்டேன். போகங்களைத் திருப்திப்பட அனுபவிக்கவில்லை. என் மூப்பைப் பெற்றுக் கொண்டு உங்களில் ஒருவன் தன் இளமைப் பருவத்தை எனக்குக் கொடுக்க வேண்டும். அவ்வாறு எவன் கிழத்தனமடைந்த என் சரீரத்தை எனக்காக ஒப்புக் கொள்ளுகிறானோ அவன் ராஜ்யத்தை ஆளக் கடவன். நான் அவன் சரீரத்துடன் மறுபடியும் இளமைப் பருவம் பெற்று காம சுகங்களை அடைய விரும்புகிறேன்" என்றான்.

முதலில் மூத்த குமாரனைக் கேட்டான்? அவன், "மகாராஜாவே! உம்முடைய கிழத்தனத்தை நான் பெற்றுக் கொண்டேனானால் பெண்களும் வேலைக்காரர்களும் என்னைப் பார்த்துச் சிரிப்பார்களே! என்னால் முடியாது; என்னைக் காட்டிலும் உமக்குப் பிரியமான என் தம்பிகளைக் கேளும்" என்றான்.

இரண்டாம் மகனைக் கேட்டதற்கு அவன், "தந்தையே! பலத்தையும் ரூபத்தையும் அறிவையும் அழிப்பதான மூப்பைப் பெற்றுக் கொள்ளச் சொல்லுகிறீர். இதற்கு இசைய எனக்குப் போதிய தைரியம் இல்லை" என்று மறுத்து விட்டான்.

மூன்றாம் மகனும், "கிழவனுக்கு யானை ஏற முடியாது; குதிரை ஓட்ட முடியாது. பேச்சும் தடுமாறும். அந்த நிலையில் நான் என்ன செய்ய முடியும்? உயிருடன் இருந்து என்ன பயன்? என்னால் ஒப்புக்கொள்ள முடியாது" என்று சொல்லி விட்டான்.

இவ்வாறு மூவரும் மறுத்துவிட அரசனுக்குக் கோபம் பொங்கிற்று. நான்காவது குமாரனைப் பார்த்து, "நீ சில காலத்துக்கு என் மூப்பைப் பெற்றுக் கொள்ளக் கடவாய். உன் இளமையைச் சில காலத்திற்கு எனக்குத் தந்தாயானால் பிறகு உனக்குத் திருப்பிக் கொடுத்து விட்டு, எனக்குச் சாபமாக வந்த மூப்பை எடுத்துக் கொண்டு விடுவேன்" என்றான். "அரசனே! மன்னிக்க வேண்டும். கிழவன் தட்டுத் தடுமாறி உடல் அசுத்தம் நீக்கிக் கொள்வதற்குக் கூடக் குழந்தைகளைப் போல் பிறர் உதவியை நாட வேண்டியதாகும். நீர்

S. S. S.

சிறிய சேமிப்புத் திட்டம்

உங்களுடைய வியாபாரம் சரிவர நடைபெறுவிடிலோ பண்டங்களின் விலை இறங்கி விட்டாலோ தங்களுக்கு உடம்பு அசௌகரியமாகி விட்டாலோ அல்லது தங்கள் உத்யோகம் போய்விட்டாலோ

இவைகளுக்கெல்லாம் முன்னெச்சரிக்கையான பாதுகாப்பாக

நேஷனல் சேவிங்ஸ் சர்ட்டிபிகேட்டுகளை

வாங்குங்கள்

ரூ 10/-க்கு வாங்கி ரூ 15/- அடையுங்கள்.

இதற்கு வருமான வரி கிடையாது.
வைத்திருக்க பத்திரமானது.
தங்கத்தைவிட பத்திரம் வாய்ந்தது.
வாங்க மிகவும் சுலபமானவை.
வட்டி விகிதமும் அதிகம்.
எதிர்காலத்திற்குத் தகுந்த பாதுகாப்பு.

நாஷனல் சேவிங்ஸ் சர்ட்டிபிகேட்டுகள் தபாலாபீஸ்களிலும் சேவிங்ஸ் பீரோக்களிலும் அங்கீகரிக்கப்பட்ட ஏஜெண்டுகளிடமும் கிடைக்கும்.

ஒவ்வொரு ஏஜெண்டினிடமும் அவர் அங்கீகரிக்கப்பட்ட ஏஜெண்டு தான் என்று அத்தாட்சி அளிக்கப்பட்ட சர்ட்டிபிகேட்டு இருக்கும். தாங்கள் வேண்டும்போது அதை நீங்கள் பார்வையிடலாம்.


இப்படி அங்கீகரிக்கப்பட்ட ஏஜெண்டுகளிடம் வரிசையாக இலக்க மிடப்பட்ட ரசீது புஸ்தகங்கள் இருக்கின்றன. நீங்கள் சர்ட்டி பிகேட்டுகளுக்காக கொடுக்கும் பணத்திற்கு அவரால் கொடுக்கப் படும் ரசீதின் கௌண்டர் பாயிலை உங்கள் எதிரிலேயே பூர்த்தி செய்யச் சொல்லுங்கள்.

அங்கீகரிக்கப்பட்ட ஏஜெண்டுகளின் சேவை உங்களுக்கு முற்றிலும் இலவசமானது.



ஆனந்தமாக லிப்டன் தேனீர் அருந்தும்போது பொறுப்பற்ற பேச்சுகளைப் பேசாதீர்கள்.

காரணம் என்ன?



ஏன்டீ, குழந்தை அழுகிறான்?
கடுக்கன் போட்டுக்கணும்னு அழுகிறான்.
கடுக்கனைப் போடுகிறது தானே?
போட்டுக்கொண்டுதான் இருக்கேன்?
இப்ப ஏன் அழுகிறான்?
வலிக்கிறது என்று அழுகிறான்!

என்று காட்டுவதற்குக் குமார ராஜா சில உதாரணங்களைக் குறிப்பிட்டார்.

இந்தியாவில் விவசாயத்தை வளர்த்து உணவுப் பொருளைப் பெருக்காத முட்டாள் தனத்தை எடுத்துக் காட்டினார். இப்போது நோட்டுப் பணத்தைப் பெருக்கி யிருப்பதுபோல் முன்னாலேயே பெருக்கி விவசாய அபிவிருத்தி ஏன் செய்திருக்கக் கூடாது?

இங்கிலாந்துக்கும் அமெரிக்காவுக்கும் இந்தியா அனுப்பி யிருக்கும் யுத்த சாமான்களுக்காக இந்தியாவுக்கு வர வேண்டிய தொகை இதுவரை 800 கோடி சேர்ந்திருக்கிறது. யுத்தம் முடிவதற்குள் இந்தத் தொகை ஆயிரம் கோடி ஆகி விடலாம்.

இவ்வளவு தொகையும் இங்கிலாந்தில் இந்தியாவின் கணக்கில் ஸ்டர்லிங் நோட்டுகளாக வைக்கப் பட்டிருக்கின்றன. இதைக் குறித்து இங்கிலாந்தில் சிலர் "இந்தியாவின் சுயநலத்தைப் பார்! உலக க்ஷேமத்துக்காக யுத்தம் செய்யும் இங்கிலாந்திடமும் அமெரிக்காவிடமும் இந்தியா பணம் கேட்கிறது!" என்று கூச்சலிடத் தொடங்கி யிருப்பதைப் பார்த்தால், மேற்படி ஆயிரங்கோடிக்கும் யுத்த முடிவில் இந்தியாவுக்குப் பட்டை நாமந்தானோ என்ற சந்தேகம் உண்டாகி யிருக்கிறது.

"மேற்படி தொகையானது இந்திய மக்கள் கண்ணீரும் இரத்தமும் சிந்திச் சம்பாதித்தது" என்று குமாரராஜா சொல்லி யிருக்கிறார்.

இங்கிலாந்தின் மேற்படி கடனைக் கழிப்பதற்காக இந்தியாவிலேயே உற்பத்தியாகக் கூடிய பொருள்களை இங்கிலாந்திலிருந்து இறக்குமதி செய்யும் அநியாயத்தைக் குறிப்பிட்டிருக்கிறார்.

பிரிட்டிஷ் கிழக்கிந்தியக் கம்பெனியின் புனர் அவதாரமான 'யு. கே. ஸி. ஸி.' என்னும் வியாபாரக் கம்பெனி இந்தியாவின் வெளிநாட்டு வியாபாரத்தை அடியோடு கைப்பற்றி வரும் அக்கிரமத்தையும் சுட்டிக் காட்டி யிருக்கிறார்.

யுத்தம் நடக்கிறபோதே இப்படியென்றால், யுத்தம் முடிந்த பிறகு இந்தியாவின் பொருளாதாரம் அதோகதியைத்தான் அடையும் என்று சொல்ல வேண்டியதில்லை.

இதற்கெல்லாம் விமோசனம் வேண்டுமானால், இந்தியாவில் தேசிய சர்க்கார் கூடிய சீக்கிரத்தில் ஏற்பட வேண்டும்; யுத்தம் முடிவதற்குள் அவசியம் ஏற்பட்டாக வேண்டும்.

இதை வர்த்தக சம்மேளனத் தலைவர் வற்புறுத்தி யிருப்பதுடன், தேசிய சர்க்கார் ஏற்படுவது சாத்திய மாகும் பொருட்டுச் சிறையிலுள்ள காங்கிரஸ் தலைவர்களை விடுதலை செய்ய வேண்டும் என்றும் கூறி யிருக்கிறார்.

அம்மாதிரியே அகில இந்திய வர்த்தக சம்மேளனமும் வற்புறுத்தித் தீர்மானம் நிறைவேற்றி யிருக்கிறது.

ஆம்; இந்தியாவின் பொருளாதாரம் என்றென்றைக்கும் அதோகதி யடையாமல் தடுக்க வேண்டுமானால், ஏழை இந்தியாவில் கொஞ்ச நஞ்சம் பாக்கியுள்ள பொருள் மூலங்களும் சுரண்டப் படாமல் தடுக்க வேண்டுமானால், இந்தியாவில் தேசிய சர்க்கார் ஏற்பட்டே யாக வேண்டும்.

ஆகவே, இந்தியாவில் தேசிய சர்க்கார் ஏற்படுத்துவதற்குரிய எல்லாவித முயற்சிகளையும் நாம் போற்றுகிறோம். அந்த முயற்சியில் ஈடுபட்டவர்கள் அனைவரையும் வாழ்த்துகிறோம்.

தேசிய சர்க்கார் ஏற்படுவதற்குத் தெரிந்தோ, தெரியாமலோ தடையா யிருப்பவர்கள் தேசத்துக்குப் பெருந் துரோகம் செய்தவர்கள் ஆவார்கள் என்று வற்புறுத்திக் கூறுகிறோம்.

எப்போதும் இல்லை!



"ஏன் தம்பி, இந்தத் தெத்துவாய் உனக்கு எப்பொழுதும் உண்டோ?"

"இ-இ-இ-இல்லிங்க! பே-பே-பே-பே பேசறபோது மா-மாத்திரந்தாங்க!"

ஐந்து ரூபாய் பரிசு: சென்ற இதழில் வெளியான 'யோசனை' என்னும் காலக்ஷேபத் துணுக்குக்குப் பரிசு பெற்றவர்: பு. ச. சந்திரமௌளி, தேனாம்பேட்டை போஸ்ட், சென்னை.

கக சௌகரியங்கள் அதிகமாகியிருக்கும். உணவுக்கும் உடைக்கும் குறைவில்லாமலிருக்கும்.

ஆனால், நாம் இந்தியாவில் காண்பதென்ன? வங்காளத்தில் லட்சோபலட்சம் ஜனங்கள் பட்டினியினால் பிராணனை விட்டதைப் பார்த்தோம்! இன்னும், தேசமெங்கும் வாழ்க்கைக்கு அவசியமான பொருள்கள் கிடைக்காமல் ஜனங்கள் திண்டாடுவதைப் பார்க்கிறோம்! எனவே, இந்தப் பணப் பெருக்கம் — மாய லக்ஷ்மியின் தாண்டவந்தான் என்பதில் ஐயம் என்ன?

தாண்டவம் நடக்கும்போதே அதனுடைய கோர லட்சணங்களை ஒருவாறு காண்கிறோம். தாண்டவம் ஒரு நாளைக்கு நிற்குமல்லவா? அப்போது அதனுடைய பயங்கர விளைவுகளை ஒன்றுக்கு நூறு மடங்காகக் காணப் போகிறோம்.

யுத்தம் முடியும்போது உலகமெங்கும் மகத்தான பொருளாதாரக் குழப்பங்கள் ஏற்படப் போகின்றன. அந்தக் குழப்பங்களில், "ஊருக்கு இளைத்தவன் பிள்ளையார் கோவில் ஆண்டி" என்பதாக இந்தியா அகப்பட்டுக்கொண்டு திண்டாட வேண்டியிருக்கும்.

காகித நோட்டுகளினாலும் யுத்த நிலைமையினாலும் நாட்டில் ஏற்பட்டிருக்கும் பொய்ப் பணப் பெருக்கம் திடீரென்று மாயமாய் மறையும். வர்த்தகமும் கைத்தொழிலும் மடமடவென்று முறியும். பஞ்சமும் பட்டினியும் வறுமையும் பிணியும் தேச மக்களைப் பீடிக்கும்.

மேற்படி விபரீதத்தை யெல்லாம் தடுப்பதற்கு ஒரே ஒரு வழிதான் உண்டு. இந்தியாவின் நன்மை ஒன்றே கருத்தாக உடைய தேசிய சர்க்கார் ஏற்படுவதுதான்.

* * *

மேலே கூறியவை யெல்லாம் ஏதோ அபூர்வமாகக் கண்டு பிடிக்கப்பட்ட உண்மைகள் அல்ல. பொருளாதார விஷயங்களில் அறிவுள்ளவர்கள் எல்லாருக்கும் சர்வ சாதாரணமாய்த் தெரிந்தவை. தேச பக்தியுள்ளவர்களுக்கெல்லாம் இந்தச் சீர்கேடான நிலைமை பெரிதும் கவலையை யளிக்கக் கூடியது என்று சொல்ல வேண்டியதில்லை.

மேற்படி கவலையானது தற்போதைய பொருளாதார நிலைமையினால் ஓரளவு லாபத்தை அடைந்து கொண்டிருக்கும் இந்திய வர்த்தக சமூகத்தைக்கூடப் பிடுங்கித் தின்கிறது என்பது சமீபத்தில் வெளியாயிற்று.

டில்லியில் கூடிய அகில இந்திய வர்த்தக சம்மேளனத்தில் தலைமை வகித்த குமாரராஜா முத்தையா செட்டியார் மேற்படி கவலையை அழுத்தமான சொற்களில் வெளியிட்டார்.

குமார ராஜாவின் பழைய அரசியல் போக்கை அறிந்தவர்களுக்கு அவருடைய சம்மேளனப் பேச்சு ஆச்சரியத்தை அளிக்காமல் போகாது. அவ்வளவு கடுமையாக அவர் தற்போதைய சர்க்காரின் பொருளாதார முறைகளைத் தாக்கியிருக்கிறார்! இதிலிருந்தே, நிலைமை உண்மையில் எவ்வளவு மோசமாகியிருக்கிறது என்பதை நன்கு அறிந்து கொள்ளலாம்.

சர்க்காரின் பொருளாதார முறைகள் தேசத்துக்கு எவ்வளவு கேடானவை

நான் இருக்கிறேன் சரிப்படுத்த!'' என்கிறார் பொக்கிஷ மெம்பர் ரெயிஸ்மன்.

இம்மாதிரியாக நாலு வருஷ காலத்திற்குள் இந்தியாவின் வருமானம் எப்படி ஐந்து மடங்கு பெருகிற்று? 84 கோடியிலிருந்து எப்படி 284 கோடிக்கு வளர்ந்தது? துண்டு விழும் கோடானு கோடி ரூபாயைப் பற்றிச் சர்க்கார் கவலைப்படாமல் இருக்க எப்படி முடிகிறது?

இந்தியாவின் ஏழை ஜனங்களிடம் அவ்வளவு கோடிக் கணக்கான வரி கொடுக்கவும், கடன் கொடுக்கவும் பணம் எப்படிச் சேர்ந்தது?

ஆமாம்; எல்லாருக்கும் தெரிந்த விஷயந்தான். இந்திய சர்க்கார் ரூபாய் நோட்டுக்களை அளவில்லாமல் அச்சடித்து வீசி வருவதுதான் காரணம்!

நோட்டுக்களை வீசுகிறார்கள் என்றால், தெருவிலே வீசி எறிகிறார்களா? கிடையாது! வேலை வாங்கிக்கொண்டு கூலி கொடுக்கிறார்கள்; சாமான் வாங்கிக்கொண்டு விலை கொடுக்கிறார்கள். வேலை என்றால் யுத்தம் சம்பந்தமான வேலை; சாமான் என்றால் யுத்தத்திற்கு அவசியமான சாமான்கள்.

இராணுவத்தில் லட்சக் கணக்கானவர்கள் சேர்ந்திருக்கிறார்கள்; இன்னும் யுத்தம் சம்பந்தமான வேலைகளில் லட்சக் கணக்கானவர்கள் ஈடுபட்டிருக்கிறார்கள். இவர்களுக்கெல்லாம் அபரிமிதமான சம்பளம் கொடுக்கப்படுகிறது.

ஒரு வாரத்துக்கு முன்பு யுத்தப் பிரசார வேலைக்காக இருபது உத்தியோகங்களுக்கு ஆள் தேவை என்று சர்க்கார் விளம்பரம் வெளியாகியிருந்தது. சம்பளம் என்ன தெரியுமா? நானூறு ரூபாய் முதல் ஆயிரம் ரூபாய் வரையில்! — இந்த மாதிரி, யுத்தங் காரணமாக ஆயிரக் கணக்கான உத்தியோகங்களைச் சிருஷ்டித்திருக்கிறார்கள்.

இராணுவத்துக்காக ஏராளமான உணவுப் பொருள் வாங்க வேண்டியிருக்கிறது. இன்னும் யுத்தத்துக்குத் தேவையான எத்தனையோ சாமான்கள் வாங்க வேண்டியிருக்கிறது. இந்தியாவுக்கு வெளியிலுள்ள போர்க்களங்களுக்கும் பல சாமான்களை அனுப்ப வேண்டியிருக்கிறது.

ஆகவே, இந்திய மக்களிடம் வேலை வாங்கிக் கொண்டு கூலிக்காகவும், சாமான் வாங்கிக்கொண்டு விலைக்காகவும் சர்க்கார் காகித நோட்டுக்களை அச்சடித்து வீசுகிறார்கள்.

அந்தக் காகித நோட்டுக்கள் வியாபாரிகள் மூலமாகத் தேசத்தில் பரவுகின்றன.

அப்படிப் பரவும் நோட்டுக்களை சர்க்கார் வரி மூலமாகத் திரும்பவும் வசூலித்துக் கொள்கிறார்கள்; கடன் மூலமாகவும் பெற்றுக் கொள்கிறார்கள்!

ஆகா! இப்படியும் உண்டா? சர்க்கார் வருமானத்தைப் பெருக்கிக் கொள்ளவும், காரியங்களை நடத்திக் கொள்ளவும் வெகு சுலபமான மார்க்கமாயிருக்கிறதே? தேசத்தின் பொருள் வளம் பெருகவும் நல்ல வழியாய்க் காண்கிறதே!

ஆம், சரியானபடி பயன் படுத்திக் கொண்டால் சுலபமான மார்க்கந்தான்; வெகு நல்ல வழிதான்.

நல்ல முறையில் பயன் படுத்தாவிட்டால், நாட்டின் சர்வ நாசத்துக்கு அதுவே வழியாகும்.

ஒரு நாட்டின் சுயராஜ்ய சர்க்கார் மேற்படி முறையைக் கையாண்டால், தேசத்தின் பொருள் வளம் உண்மையிலேயே பெருகும்படி செய்யலாம். நோட்டுச் செலாவணியின் மூலம் கோடிக் கணக்கான ஜனங்களை தேச முன்னேற்ற வேலைகளில் ஈடுபடுத்தலாம். ஏரிகள் வெட்டலாம்; அணைகள் கட்டலாம். தரிசு நிலங்களை வளப்படுத்தி விளைவைப் பெருக்கலாம். புதிய புதிய தொழில்களை ஸ்தாபிக்கலாம். நாட்டுக்கு வேண்டிய சகல பொருள்களையும் தயாரித்துக் கொள்ளலாம்.

ருஷியா முதலிய தேசங்களில் மேற்படி முறையைக் கையாண்டுதான் சில வருஷ காலத்தில் தேசத்தின் செல்வத்தைப் பன்மடங்கு பெருக்கித் தரித்திரத்தை அடியோடு ஒழித்தார்கள்.

ஆனால் நாட்டின் நலத்தில் கவலையில்லாத அன்னிய சர்க்கார் மேற்படி முறையைக் கையாள்வார்களானால், கொஞ்ச காலத்துக்கு மாய லக்ஷ்மியின் கோர தாண்டவத்தைக் காணலாம்; பிறகு சர்வ நாசத்தையும் பார்க்கலாம்.

இந்தியாவில் இப்போது நாம் காண்பது உண்மையான பொருள் வளப் பெருக்கமா? அல்லது மாய லக்ஷ்மியின் கோர தாண்டவமா?

உண்மையான பொருள் வளமாயிருந்தால், தேசத்தில் ஜனங்களுடைய

சந்தோஷச் செய்தி!

ஏப்ரல் 1வ முதல்

கல்கி

ஞாயிற்றுக்கிழமை தோறும் வெளிவரும்.

சனிக்கிழமையன்றே நேயர்களுக்குப்
பத்திரிகை கிடைக்கும்.

ஏப்ரல் 1வ முதல்

சந்தா விவரம்

வருஷ சந்தா	ரூ.	13—0—0
6 மாத சந்தா	ரூ.	6—8—0
தனிப் பிரதி	அணா	0—4—0

மானேஜர்

கல்கி காரியாலயம்

சென்னை

மாய லக்ஷ்மியின் கோர தாண்டவம்!

இந்தியா ஏழைத் தேசம் என்று யார் சொன்னது? இந்தியாவில் நாளுக்கு நாள் தரித்திரம் அதிகமாகி வருகிறதென்று யார் சொன்னது? இந்தியாவில் பஞ்சம் என்றும், பணக் கஷ்டம் என்றும் எந்த புத்திசாலி சொன்னது? சுத்தத் தப்பு! கிடையவே கிடையாது! இல்லவே இல்லை!

ஒரு வேளை மேற்சொன்னதெல்லாம் நாலைந்து வருஷத்திற்கு முன்னால் உண்மையாயிருக்கலாம். ஆனால் இந்த மகத்தான, இந்த அற்புதமான, இந்த ஆனந்தமான யுத்தம் ஆரம்பித்தாலும் ஆரம்பித்தது: ஆஹா! இந்தியாவில் செல்வம் எப்படிச் செழித்து வருகிறது! எவ்வாறு மகாலக்ஷ்மியின் அருள் பொங்கி வழிகிறது!

ஓ யுத்தமே! நீ வாழ்வாயாக! நீ தீர்க்காயுள் பெறுவாயாக! நீ நீடூழி நீடித்து நடப்பாயாக!

இதெல்லாம் உங்களுக்கு வேடிக்கையாயிருக்கிறதா? நாம் சொல்லுவதில் நம்பிக்கை இல்லையா? நல்லது, கேளுங்கள். ஒரு நாட்டின் பணப் பெருக்கத்தையும் செல்வ வளத்தையும் எப்படி மதிப்பிடுவது? அந்த நாட்டு அரசாங்கப் பொக்கிஷத்தைக் கொண்டுதானே மதிப்பிட வேண்டும்? அரசாங்கத்தின் வருமானம், செலவு இவைகளைக் கொண்டுதானே சொல்ல வேண்டும்?

சரி, இந்திய அரசாங்கத்தின் வரவு செலவைக் கொஞ்சம் கவனிக்கலாம். நாலு வருஷத்தில், அதாவது யுத்தம் ஆரம்பமான பிறகு இந்திய அரசாங்கத்தின் வரவு செலவு எப்படிப் பெருகியிருக்கிறதென்று பார்க்கலாம்.

1938-ம் வருஷத்தில் இந்திய அரசாங்கத்தின் வரவு செலவு நிலைமை என்ன தெரியுமா?

வருமானம்	ரூ. 84 கோடி
செலவு	ரூ. 86 கோடி
துண்டு விழுந்த தொகை	ரூ. 2 கோடி

இவ்விதம் துண்டு விழுந்த ரூ. 2 கோடியை எப்படிச் சரிக்கட்டுவதென்று அந்தக் காலத்திலிருந்த பொக்கிஷ இலாகா அங்கத்தினர் தவியாய்த் தவித்தார். அதற்காகப் புதிய வரிகள் சில போட்டார். தேசமெங்கும் அல்லோல கல்லோலப்பட்டது. "ஐயோ! மூன்று கோடி ரூபாய் புது வரியா?" என்று பொதுஜனங்கள் பொருமினார்கள். சட்டசபை அங்கத்தினர்கள் கதறினார்கள். தேச பக்தர்கள் சீறினார்கள்.

நாலு வருஷ யுத்தத்துக்குப் பிறகு நாளது 1944-45ம் வருஷத்து இந்திய சர்க்கார் வரவு செலவுத் திட்டத்தைக் கொஞ்சம் பார்க்கலாம். இந்திய சட்டசபையில் சமீபத்தில் சமர்ப்பிக்கப்பட்ட அந்தத் திட்டத்தின்படி:

சிவில் இலாகா செலவுகள்	ரூ. 86 கோடி
இராணுவச் செலவுகள்	ரூ. 276 கோடி
மொத்தம் செலவு	ரூ. 362 கோடி
வருமானம்	ரூ. 284 கோடி
துண்டு விழும் தொகை	ரூ. 78 கோடி

வருமானமும் செலவும் எப்படிப் பெருகியிருக்கிறது பார்த்தீர்களா? வருமானம் 84 கோடியிலிருந்து 284 கோடிக்குப் பெருகியிருக்கிறது! செலவின் பெருக்கமோ கேட்க வேண்டியதில்லை. 1938-ல் மொத்த வருமானம் எவ்வளவோ, அவ்வளவு பெரிய தொகை இந்த வருஷத்தில் துண்டு விழுகிறது!

ஆனால் இப்படித் துண்டு விழுகிற 78 கோடி ரூபாயைப் பற்றிப் பொக்கிஷ அங்கத்தினர் ரெயிஸ்மன் ஏதாவது கவலைப்படுகிறாரோ? கிடையவே கிடையாது. "பூ! இது என்ன பிரமாதம்?" என்கிறார். $23\frac{1}{2}$ கோடி ரூபாய் வருமானம் அளிக்கக் கூடிய புதிய வரிகளைப் போடுகிறார்! "பாக்கி $54\frac{1}{2}$ கோடியைப் பற்றியும் கவலையில்லை; கடன், கிடன் வாங்கிச் சரிப்படுத்தி விடலாம்" என்று குதூகலமாய்ச் சொல்கிறார்!

இந்த வருஷத்தில் மட்டுந்தான் இப்படித் துண்டு விழுந்தது என்கிறீர்களா? ஏன்? 1943-44 ம் ஆண்டில் 92 கோடி துண்டு விழுந்திருக்கிறது! அதற்கு முந்திய 1942-43 ல் ரூ. 112 கோடி துண்டு விழுந்திருக்கிறது! ஆனாலும், "ஒன்றுக்கும் கவலை வேண்டாம்!

நிகழ்ச்சிச் சித்திரம்



-உம்மன்


கிழக்குப் போர் முனையில்
"ஹிட்லர் சர்வநாசப் படுகுழிக்கு வெகு அருகில் வந்துவிட்டார்" என்று ஸ்டாலின் கூறுகிறார்.
மேற்கு முனையில்
"ஹிட்லர் ஜெர்மனியின் பலம் இன்றும் குறைந்துபோகவில்லை" என்று சர்ச்சில் கூறுகிறார்.
ஹிட்லரின் கதி எப்படியானாலும், ஸர் முகம்மது உஸ்மான் இந்தியப் பாதுகாப்பு இலாகாவை ஏற்றுக் கொண்டிருக்கிறபோது நமக்கு என்ன கவலை?

இந்தியன் பாங்கி லிமிடெட் - மதராஸ்.

1943ளு டிசம்பர்மீ 31உ யன்றுள்ள கணக்கு விவரங்கள்.

பொறுப்புகள் :

	ரூ.	அ.	பை
மூலதனம் : அதிகாரம் பெற்றது ...	1,00,00,000	0	0
வெளியிடப்பட்டு வாக்களிக்கப்பட்டது ...	60,00,000	0	0
செலுத்தப்பட்டது ...	28,90,385	10	7
ரிஸர்வ் & இதர நிதிகள்	29,26,147	2	0
டிபாஸிட்டுகள்	8,13,62,549	4	1
வசூலாக வேண்டிய உண்டியல்கள் ...	36,20,006	6	0
வெளிநாட்டு உண்டியல்கள், அத்தாட்சி பத்திரங்கள் முதலியன ...	1,07,932	6	4
இதர இனங்கள்	50,98,316	8	2
மொத்தம் ...	9,60,05,337	5	2

ஐவேஜுகள் :

	ரூ.	அ.	பை
கைவசமும் பாங்கர்களிடமுள்ள ரொக்கமும் இந்தியா கவர்ன்மெண்ட் உண்டியல்களும்	1,59,93,155	12	3
முதலீடுகள் :			
இந்திய கவர்ன்மெண்ட இதர கால வரையறையுள்ள டிரஸ்ட் செக்யூரிடிகள் ...	4,11,80,522	2	6
இந்திய சமஸ்தானங்கள் இதர கவர்ன்மெண்ட் ஆதிக்கமுள்ள ஸ்தாபனங்களது டிரஸ்ட் செக்யூரிடிகள் ...	7,44,415	0	0
இதர முதலீடுகள்	1,42,616	4	0
கவர்ன்மெண்டு செக்யூரிடிகளிலும் ஜாயிண்ட் ஸ்டாக் பாங்கிகளிலும் முதலீடாகக் கொடுத்து வைத்திருக்கும் செக்யூரிடி டிபாஸிட்டு	4,79,833	5	9
கடன்கள் & அட்வான்ஸ்கள் ...	3,23,44,287	1	0
பாங்கிக் கட்டிடங்களும், சொத்துக்களும்...	1,85,576	15	0
இரும்பு பெட்டிகள், மர சாமான்கள், புத்தகங்கள், பாரங்கள், ஸ்டேஷனரி முதலியன கைவசமிருப்பவை ...	4,09,852	3	2
வசூலாக வேண்டிய உண்டியல்கள் ...	36,20,006	6	0
வெளிநாட்டு உண்டியல்கள், கிரெடிட் பத்திரங்கள் முதலியன ...	1,07,932	6	4
இதர இனங்கள்	7,97,139	13	2
மொத்தம் ...	9,60,05,337	5	2

கல்கி

மலர் 3 } தமிழ்த்திரு நாடு தன்னைப் — பெற்ற
தாயென்று கும்பிடடி பாப்பா — பாரதியார் { இதழ் 23

என்ன சேதி?

விடுதலையும் ....

கோவைக் காங்கிரஸ் தலைவரும் இந்திய சட்டசபை அங்கத்தினருமான ஸ்ரீ. டி. எஸ். அவிநாசிலிங்கம் பாதுகாப்புச் சிறையிலிருந்து சென்ற வாரத்தில் விடுதலை செய்யப்பட்டார். விடுதலையானவுடனே இராமருடைய வில்லிலிருந்து கிளம்பிய பாணத்தைப்போல் நேரே டில்லி சட்டசபைக்குப் போய்ச் சேர்ந்தார். ஸ்ரீ அவிநாசி லிங்கத்தை விடுதலை பெறத் தகுந்தவராக அதிகார வர்க்கத்தவர் ஏன் பொறுக்கினார்கள் என்பது அவருக்கே அதிசயத்தை அளித்திருப்பதாய்த் தெரிகிறது. விடுதலையானதும் ஸ்ரீ செட்டியார் விடுத்த அறிக்கையில் தம் அதிசயத்தை வெளியிட்டதுடன் பாதுகாப்பிலுள்ள மற்ற அரசியல் கைதிகளையும் விடுதலை செய்யவேண்டுமென்று வற்புறுத்தியிருக்கிறார். ஸ்ரீ செட்டியாரின் வற்புறுத்தலை நாம் பலமாக ஆதரிக்கிறோம். ஸ்ரீ அவிநாசி லிங்கத்தைச் சிறையில் வைத்திருந்தது எவ்வளவு அநாவசியமோ, அவ்வளவு அநாவசியந்தான் மற்றவர்களை வைத்திருப்பதும். அதில் அர்த்தமும் இல்லை, நியாயமும் இல்லை.

...... மனக் கசப்பும்

ஆனால், பாதுகாப்புக் கைதிகளை விடுதலை செய்வதற்கு ஸ்ரீ அவிநாசி லிங்கம் செட்டியார் சொல்லும் ஒரு காரணத்தை மட்டும் நாம் ஒப்புக்கொள்வதற்கில்லை. "அரசியல் கைதிகளைச் சிறையிலேயே வைத்திருப்பதால் மனக் கசப்புதான் வளரும்" என்று அவர் சொல்கிறார். ஏற்கெனவே வளர்ந்திராத மனக் கசப்பு இனிமேல் புதிதாக வளர்ந்து விடும் என்று நாம் நம்புவதற்கில்லை. மனக் கசப்பின் வளர்ச்சியில் கொஞ்ச நஞ்சம் பாக்கியிருந்திருந்தால், ஸ்ரீமதி கஸ்தூரிபாயின் மரணத்தினால் அது பரிபூரணமாகியிருக்கவேண்டும்!

ஸர் விஜயாவும் ...

அரசியல் நிலைமையைப் பற்றி அறிக்கை வெளியிடுவதில் இந்தியாவிலேயே தற்சமயம் அக்கிரஸ்தானம் வகிப்பவர் யார் என்று கேட்டால், அவர் ஆந்திர தேசத்து மகாராஜகுமார் ஸர் விஜயா அவர்கள்தான். பத்திரிகைகளில் எவ்வளவுதான் இட நெருக்கடியிருந்தாலும், ஸர் விஜயாவின் அபிப்பிராயங்களுக்கு எப்படியாவது இடம் கிடைத்துவிடும். சமீபத்தில் இவர் ஐக்கிய மாகாண க்ஷத்திரியர் மகாநாட்டில் தலைமை வகித்து க்ஷத்திரிய வீரத்துடன் கர்னல் அமெரியை வெளுத்து வாங்கினார்! பிறகு, இந்தியர்களைப் பார்த்து, "அதிகமாகப் பயப்பட வேண்டாம்! நம்பிக்கைக்கு இடமிருக்கிறது!" என்று நல்ல வார்த்தையும் சொல்கிறார்.

...அசட்டு நம்பிக்கையும்

ஸர் விஜயாவின் நம்பிக்கைக்குக் காரணம் என்ன தெரியுமா? இங்கிலாந்தில் ஸ்கிப்டன் என்னுமிடத்தில் நடந்த தேர்தலில் சர்ச்சிலுக்கு விரோதமான 'காமன் வெல்த்' கட்சி அங்கத்தினர் ஜயித்து விட்டாராம்! இதிலிருந்து, ஸர் விஜயா, சர்ச்சில் கட்சி அடியோடு தொலைந்து, எதிர்க் கட்சியார் அதிகாரத்துக்கு வந்து, இந்தியாவுக்குச் சுயராஜ்யத்தைத் தூக்கிக் கொடுக்கப் போகிறார்களென்று ஆகாசக் கோட்டை கட்டுகிறார்! சர்ச்சிலுக்கு விரோதமாகவும், இந்தியாவுக்குச் சாதகமாகவும் பேசும் ஸோரென்ஸன் போன்ற இரண்டொரு 'பைத்தியக்காரர்'கள் எப்போதும் பார்லிமெண்டில் உண்டு. இவர்கள் மூலமாக இந்தியா விடுதலை பெற்றுவிடுமென்று நம்பும் அசட்டுத்தனத்துக்கு உபமானம் வேண்டுமானால், ஜப்பான் படையெடுத்து வந்து இந்தியாவுக்குச் சுதந்திரம் அளிக்கப் போகிறது என்று நம்பும் மூட்டாள்தனத்தைத்தான் சொல்ல வேண்டும்!

கல்கி

பொருளடக்கம்

மலர் 3
இதழ் 23

1944 மார்ச் 10

சுபானு
மாசி 27

"கல்கி"யில் வெளியாகும் கதைகளில் உள்ள பெயர்கள் எல்லாம் கற்பனைப் பெயர்கள்; சம்பவங்களும் கற்பனைச் சம்பவங்கள்.

★

பிள்ளைக் கனி அமுதாய், பேசும் பொற் சித்திரமாய், சின்னஞ்சிறு கிளியாய், செல்வக் களஞ்சியமாய் இந்தப் புண்ணிய பாரத பூமியில் எத்தனையோ குழந்தைகள் யாழினும் குழலினும் இனிய மழலை பேசித் தவழ்ந்து விளையாடி வளர்ந்து வருகின்றன. இந்தக் குழந்தைகளுக்கெல்லாம் வயது வந்து யௌவனப் பிராயத்தை அடையும் போது, சுதந்திர பாரத நாட்டில் அவர்கள் தலை நிமிர்ந்து நடப்பார்களா? அல்லது நம்மைப் போலவே அடிமை இந்தியாவில் கூனிக் குறுகி நடப்பார்களா? வீர சுதந்திர பூமியை அவர்களுக்குப் பிதிரார்ஜிதமாய் விடப் போகிறோமா? அல்லது "எங்களைப் போலவே அடிமை வாழ்வில் கிடந்து உழலுங்கள்" என்று ஆசிகூறப் போகிறோமா?

★





நம்பிக்கை!
வந்த விருந்தினரை நரஸுஸ் காபி அளித்து உபசரித்திருக்கிறாள். அவர்கள் அதை வெகுவாக விரும்புவார்களென்பது அவளுக்கு நிச்சயமாகத் தெரியும். நரஸுஸ் காபி, டீ மிகச் சிறந்தவை என்பது விஷயமறிந்த வீட்டு எஜமானிகளுக்குத் தெரிந்தது தானே!
நரஸுஸ்
இந்தியத் தயாரிப்பில் தலைசிறந்தது
★
நரஸுஸ் மான்யுபாக்சரிங் கம்பெனி,
சேலம் தென்னிந்தியா
MNK 20

நீங்கள் ரெட் க்ராஸை ஏன் ஆதரிக்க வேண்டுமென்பதற்கு வேறொரு காரணம்



புண்பட்ட உடம்பையாற்றவும், சீர்குலைந்த மனதை தேற்றவும் கூடுமான சுக சௌகரியங்கள் நாங்கள் கொடுக்கிறோம் . . . சொல்லொணா நரக வேதனைகளுக் காளாகியுள்ள ஒருவனுக்கு, ஒரு சுத்தமான பஞ்சு மெத்தை சுவர்க்கமேயாம். போரின் கோரக் கனவுகள் மறைந்து, காயங்களால் உடல் சோர்ந்து துடியாய் துடித்தெல்லா மானபிறகு, குளுமையான துப்பட்டியும், அப்பழுக்கற்ற பைஜாமாவும் பேரின்பந்தான் அளிக்கும் — ஆற்றித் தேற்றும் இன்பம்! எல்லா இந்தியப் படைகளிலும், நோய்ப் பட்டும் காயமடைந்து மிருப்போருக்கு இது போன்ற சுக சௌகரியங்கள் கொடுத்துதவுவது எங்கள் பெரும் பாக்கியம். 'ஆஸ்பத்திரி ஸப்ளைகள்' எனும் சாதாரண தலையங்கத்தின் கீழ் நோய், வலிகளையாற்றவும், அபாயகரமான சோர்வை நீக்கி, மனதிற்கு மீண்டும் தைரியமும், உற்சாகமும் ஊட்டி, சீக்கிரம் உடம்பு தேறச் செய்யவும் உதவக்கூடிய எல்லா வஸ்துக்களும் நாங்கள் கொடுத்து வருகிறோம். இந்தியாவை ஆக்கிரமணத்தினின்றும் பாதுகாத்து வரும் ஆட்களுக்கு இந்தியன் ரெட் க்ராஸ் & ஸெண்ட் ஜான் செய்துவரும் அநேக கைங்கரியங்களில் இது ஒன்றேயாம் — ஆனால் அவை யாவும் உங்கள் ஆதரவையே பொறுத் திருக்கின்றன. தாராளமாகத் தந்துதவுங்கள். — உங்களால் கூடுமான அளவு, கூடுமான பொழுதெல்லாம்.

★ இந்தியன் ரெட் க்ராஸ் & ஸெண்ட் ஜான் மத்திய கிழக்கிலுள்ள எல்லா இந்தியன் ராணுவ ஆஸ்பத்திரிகள், அவை சம்பந்தமான எல்லா மெடிக்கல் யூனிட்டுகள், ரெஜிமெண்டல் உதவி சாவடிகள், பீல்ட் க்ளியரிங் ஸ்டேஷன்கள், காஷுவால்டி க்ளியரிங் ஸ்டேஷன்கள் முதலியவற்றிற்கும், ஆஸ்பத்திரி வண்டிகள், ஆஸ்பத்திரி கப்பல்களுக்கும் 'ஆஸ்பத்திரி ஸப்ளைகள்' அளித்து வருகிறது. கூட, அது இராக்கிலும், இரானிலுமுள்ள எல்லா ராணுவ ஆஸ்பத்திரிகளுக்கும், இந்தியாவிலுள்ள எல்லா ராணுவ ஆஸ்பத்திரிகளுக்கும் ஸப்ளைகள் அளிக்கிறது. இதற்கெல்லாம் நிறையப் பணம் தேவை. தயவுசெய்து உதவி புரியுங்கள்.





INDIAN RED CROSS & ST. JOHN

Send your subscription clearly earmarked "INDIAN RED CROSS" to the nearest of these addresses:— Joint War Charities Committee, Banqueting Hall, Government House, Madras. Chief Commissioner's War Fund, Mercara, Coorg, Bangalore C. & M, Station War Fund Association, Imperial Bank of India, Bangalore.

IRC. 24 - 23 TM.

ஒப்பற்ற நாடகத்தின்
உன்னத ஆரம்பம்

திருச்சி முனிஸிபல் பப்ளிக் ஹாலில்

9-3-44 வியாழக்கிழமை முதல்

இணையற்ற சீன்களுடனும், ஈடில்லா ஆடைகளுடனும், உணர்ச்சிமிக்க நடிப்புடனும், உன்னதமான கானங்களுடனும், செட்டிமார் நாட்டில் ஜெயக்கொடி நாட்டியதும், அனேக வெள்ளி கோப்பைகளும், தங்க, வைர மெடல்களும், நற்சாக்ஷி பத்திரங்களும், பரிசாக பெற்றதுமான

காரைக்குடி ஸ்ரீ ராம பால
கான விநோத சபையார்

பக்த சாருகதாசர்

என்னும் புண்ணிய புராண புதிய நாடகத்தை அதி விமர்சையாய் நடத்துவார்கள்

தமிழ்நாட்டில் மகத்தான
ஆரம்ப தினத்தை
விரைவில் எதிர்
பாருங்கள் !



'பந்துலம்மா'

(தெலுங்கு)

★

—: விவரங்களுக்கு :—

தஞ்சாவூர், திருச்சி, ராமநாதபுரம், திருநெல்வேலி, சேலம், கோயம்புத்தூர் ஜில்லாக்களுக்கு :

பழனியப்பா பிலிம்ஸ்,


காரைக்குடி.

சென்னை நகரம், வட ஆற்காடு, தென் ஆற்காடு, செங்கல்பட்டு ஜில்லாக்களுக்கு :

ஸுகுமார் பிக்சர்ஸ்

லிமிடெட்

வேபரி :: மதராஸ்


கொலம்பியா
குமாரி சியாமளா
பாடிய
GE. 6126
நீ வல்லதுண...
சங்கீத ஞானமு
சங்கீதவித்வான்
துரையூர் ராஜகோபால சர்மா
பாடிய
GE. 6081 உன்னைப்போல் பாகம் 1 & 2.
(காம்போதி)
M.U.A.C. கர்னடிக் ஆர்செஸ்டிரா
GE. 6132 முந்துவெனுக (தர்பார்)
கிஸ்மத் டாக்கீ பாட்டுகள்
(கொலம்பியா ஆர்செஸ்டிரா) GE. 3258-3259
ஸரஸ்வதி ஸ்டோர்ஸ்
மதராஸ்